(ii) நீர்க்கரைசலில் NO_3^-/ $NaNO_{3\,(aq)}$ அல்லது Cl^-/ $NaCl_{(aq)}$ முன்னிலையில் நடைபெறும் கூட்டல் தாக்கம், உருவாகும் விளைவில் உள்ள நைதரசனை அல்லது குளோரீனை கொண்டிருப்பதனல் அறியப்படும்.

(c) (i)



(ii)



3331

உயர் கல்விப் பதிப்பகம்.

36, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தூய கணிதம் 1. க.பொ.த (உயர் தரம்) மாதிரி விடைகள் ஓகஸ்ட், 1991.

ஆறு வினாக்களுக்கு விடை தருக.

1 (i) $f(r) = 1/r^2 \quad (r \neq 0)$ எனின்

$$f(r+1) - f(r) = -\frac{(2r+1)}{r^2(r+1)^2}$$ எனக்காட்டுக.

இதிலிருந்து தொடர்

$$\frac{3}{1^2 \cdot 2^2} + \frac{5}{2^2 \cdot 3^2} + \frac{7}{3^2 \cdot 4^2} + \cdots$$

இனுடைய முதல் n உறுப்புகளின் கூட்டுத் தொகையைக் காண்க.

மேலே உள்ள தொடர் ஒருங்கு தொடரா? உங்கள் விடைக்குக் காரணம் காட்டுக.

(ii) $|x| < 1$ இற்கு

$$\ln(1-x) = -x - \frac{x^2}{2} - \frac{x^3}{3} - \cdots - \frac{x^n}{n} - \cdots$$

எனக் கொண்டு

$$\ln 2 = \tfrac{1}{2} + \tfrac{1}{2}(\tfrac{1}{2})^2 + \tfrac{1}{3}(\tfrac{1}{2})^3 + \cdots + \tfrac{1}{n}(\tfrac{1}{2})^n + \cdots$$

எனக் காட்டுக.

$\frac{1}{r(r+1)}$ ஐப் பகுதிப் பின்னங்களாக எடுத்துரைப்பதன் மூலம்

$$S_n = \sum_{r=1}^{n} \frac{1}{r(r+1)}\left(\frac{1}{2}\right)^r = 1 - \sum_{r=1}^{n} \frac{1}{r}(\tfrac{1}{2})^r - \frac{2}{n+1}(\tfrac{1}{2})^{n+1}$$

எனக் காட்டுக.

$n \to \infty$ ஆக இருக்கும் போது $S_n \to 1 - \ln 2$ என்பதை உய்த்தறிக.

விடை:

(i) $$F_{(r+1)} - f_{(r)} = \frac{1}{(r+1)^2} - \frac{1}{r^2} = \frac{r^2 - (r+1)^2}{r^2(r+1)^2}$$
$$= \frac{-(2r+1)}{r^2(r+1)^2}$$

∴ தரப்பட்ட தொடரின் r வது உறுப்பு U_r எனின்.

$$U_r = \frac{2r+1}{r^2(r+1)^2} = f(r) - f(r+1)$$

$U_1 = f_{(1)} - F_{(2)}$

$U_2 = F_{(2)} - F_{(3)}$

$\vdots$

$u_{n-1} = F_{(n-1)} - F_{(n)}$

$U_n = F_{(n)} - F_{(n-1)}$

$\sum_{r=1}^{n} U_r = F_{(1)} - F_{(n+1)} = 1 - 1/(n+1)^2$

$n \longrightarrow \infty$ ஆக $\sum_{r=1}^{n} U_r \longrightarrow 1$ $\left(\because \frac{1}{(n+1)^2} \to 0, n \to \infty\right)$

∴ ஒருங்கும் தொடர்

(ii) $\ln(1-x) = -x - \frac{x^2}{2} - \frac{x^3}{3} \cdots \frac{x^n}{n} - \cdots$

$x = \frac{1}{2}$ ஆக

$\ln(\frac{1}{2}) = -\frac{1}{2} - \frac{1}{2}(\frac{1}{2})^2 - \frac{1}{3}(\frac{1}{2})^3 - \cdots - \frac{1}{n}(\frac{1}{2})^n - \cdots$

(ie) $-\ln 2 = -\frac{1}{2} - \frac{1}{2}(\frac{1}{2})^2 - \cdots$

$\therefore \ln 2 = \frac{1}{2} + \frac{1}{2}(\frac{1}{2})^2 + \frac{1}{3}(\frac{1}{2})^3 + \cdots + \frac{1}{n}(\frac{1}{2})^n + \cdots$

$\frac{1}{r(r+1)} = \frac{1}{r} - \frac{1}{r+1}$

$\therefore S_n = \sum_{r=1}^{n} \left(\frac{1}{r} - \frac{1}{r+1}\right)\left(\frac{1}{2}\right)^r$

$S_n = \sum_{r=1}^{n} \frac{1}{r}(\frac{1}{2})^r - 2\sum_{r=1}^{n} \frac{1}{(r+1)}(\frac{1}{2})^{r+1}$

$= \sum_{r=1}^{n} \frac{1}{r}(\frac{1}{2})^r - 2\left\{-\frac{1}{2} + \sum_{r=0}^{n-1} \frac{1}{(r+1)}(\frac{1}{2})^{r+1} + \frac{1}{n+1}(\frac{1}{2})^{n+1}\right\}$

$= -\sum_{r=1}^{n} \frac{1}{r}(\frac{1}{2})^r - \frac{2}{(n+1)}(\frac{1}{2})^{n+1}$

$n \to \infty \quad S_n \to 1 - \ln 2$

$\left(\begin{array}{l} \because \frac{1}{n+1}(\frac{1}{2})^{n+1} \longrightarrow 0 \\ \& \sum_{r=1}^{n} \frac{1}{r}(\frac{1}{2})^r \longrightarrow \ln 2 \end{array}\right)$

2 (i) $x - 4 < x(x-4) \leq 5$
ஆக இருக்கும் x இன் பெறுமானங்களின் வீச்சைக் காண்க.

(ii) $y = \frac{1}{2}(e^x - e^{-x}) + \frac{1}{2}n(e^x + e^{-x})$
ஆக இருக்கட்டும்; இங்கு n ஒரு மாறிலி. இது ≥ 2 ஆகும்.
$t = e^x$ என இட்டோ, வேறு விதமாகவோ,

(a) y யின் இழிவுப் பெறுமானம் $\sqrt{n^2-1}$ எனக் காட்டுக.

(b) $k > \sqrt{n^2-1}$ எனின், சமன்பாடு $y = k$ ஆனது t யிற்கு 2 மெய்ம் மூலங்களைக் கொண்டிருக்குமெனக் காட்டி, இம் மூலங்களைக் காண்க.

(c) $k = \sqrt{2n(n+1)}$ ஆக இருக்கும் போது மேலே குறிப்பிட்ட 2 மூலங்களினதும் பெரிது $1 + \sqrt{\frac{2n}{n+1}}$ எனக் காட்டி, சிறிய மூலத்தை தருக.

மேலே தரப்பட்ட சந்தர்ப்பத்தில், $n (\geq 2)$ இன் பெறுமானம் எதுவாயினும், தனியான $y = k$ யைத் திருத்தியாக்கும் x இன் இரு மெய்ப் பெறுமானங்களும் எப்போதும் மட$\left(\frac{2}{\sqrt{3}} - 1\right)$ இற்கும் மட$_e(\sqrt{2}+1)$ இற்குமிடையே இருக்கும் என்பதை உய்த்தறிக.

விடை

(i) $(x-4) < x(x-4) \leq 5$

$(x-4) < x(x-4)$ என்பதைக் கருதுக.

$\Rightarrow x^2 - 5x + 4 > 0$

(ie) $x < 1$ OR $x > 4$ —— ①

$x(x-4) \leq 5$ என்பதைக் கருதுக.

$\Rightarrow x^2 - 4x - 5 \leq 0$

(ie) $-1 \leq x \leq 5$ —— ②

① & ② $\Rightarrow$ $-1 \leq x < 1$ OR $4 < x \leq 5$

(ii) $y = \frac{1}{2}(e^x - e^{-x}) + \frac{1}{2}n(e^x + e^{-x})$

$t = e^x$ எனக

$y = \left(\frac{1+n}{2}\right)t + \left(\frac{n-1}{2}\right)\frac{1}{t} > 0 \quad (\because t > 0, n \geq 2)$

$\Rightarrow (1+n)t^2 - 2yt + (n-1) = 0$ —— (A)

(a) t இன் மெய்ப் பெறுமானங்களுக்கு

$y^2 - (1+n)(n-1) \geq 0$

(ie) $y \geq \sqrt{n^2-1} \qquad (y > 0)$

$y_{\text{இழிவு}} = \sqrt{n^2-1} \longleftarrow$ மெய் $(\because n \geq 2)$

(b) $y = k$ ஆக

$(1+n)t^2 - 2kt + (n-1) = 0$

இரு மெய் பெறுமானங்களுக்கு

$k^2 > (n^2-1)$

(ie) $k > \sqrt{n^2-1}$

$\therefore$ தீர்வுகள் $t = \dfrac{k \pm \sqrt{k^2 - (n^2-1)}}{(1+n)}$

(c) $k = \sqrt{2n(n+1)}$ ஆக

$t = \dfrac{k \pm \sqrt{(n+1)^2}}{(1+n)} = \sqrt{\dfrac{2n}{n+1}} \pm 1$

மூலங்களில் பெரியது $1+\sqrt{\frac{2n}{n+1}}$

〃 சிறியது $-1+\sqrt{\frac{2n}{n+1}}$

∴ $y=k$ ஐத் திருப்தியாக்கும் x இன் பெறுமானங்கள்

$x_{larger} = \ln\left(1+\sqrt{\frac{2n}{n+1}}\right)$

$x_{smaller} = \ln\left(-1+\sqrt{\frac{2n}{n+1}}\right)$

∴ $n \geq 2$ $x_{larger} < \ln(1+\sqrt{2})$

$x_{smaller} > \ln(-1+2/\sqrt{3})$

எல்லா n இற்கும்.

(3) (i) $(x-y)$ என்பது $f(x,y,z) \equiv x^4(y-z)+y^4(z-x)+z^4(x-y)$ இன் ஒரு காரணியெனக் காட்டி, இதிலிருந்து இக்கோவையை முற்றாகக் காரணிப்படுத்துக.

x, y, z ஆகியன மெய்க் கணியங்களாகவும் இவற்றில் எந்த இரு கணியங்களும் சமமற்றும் இருப்பின், $f(x,y,z)$ பூச்சியமாக இருக்கமாட்டாது என்பதை உய்த்தறிக.

(ii) ax^3+bx+c என்பது வடிவம் x^2+px+1 ஐ உடைய ஒரு காரணியைக் கொண்டதெனின், $a^2-c^2=ab$ எனக் காட்டுக.

இங்கு ax^3+bx+c உம் cx^3+bx^2+a உம் பொது இருபடிக் காரணி ஒன்றை உடையன என்பதை உய்த்தறிக.

விடை

(i) $f(x,y,z) \equiv x^4(y-z)+y^4(z-x)+z^4(x-y)$

$f(x,y,z)=0$

$\Longrightarrow (x-y)$ ஒரு காரணி.

f என்பது ஏகவினமான 5 படியிலுள்ள வட்ட சமச்சீர்ச் சார்பு.

∴ $(y-z), (z-x)$ என்பனவும் காரணிகளாகும்.

∴ $f(x,y,z) \equiv (x-y)(y-z)(z-x)\{A(x^2+y^2+z^2)$
$B(xy+yz+zx)\}$

குணகங்களைச் சமப்படுத்த x^4y / $1=-A$ $A=-1$

x^3y^2 / $0=+A-B$

$B=+A=-1$

$\therefore f(x,y,z) \equiv -(x-y)(y-z)(z-x)\{x^2+y^2+z^2+xy+yz+zx\}$

x, y, z மெய்யும், ஏதாவது இரண்டு சமமற்றும் இருப்பதால்

$(x-y)(y-z)(z-x) \neq 0$

உம் $x^2+y^2+z^2+xy+yz+zx = \frac{1}{2}\{(x+y)^2+(y+z)^2+(z+x)^2\} > 0$

$\therefore f(x,y,z) \neq 0$

(ii) $ax^3+bx+c \equiv (x^2+px+1)(ax+c) \qquad a, c \neq 0$

$ax^3+bx+c = 0$ இன் தீர்வு $x = -c/a$ ஆகும்.

$\Rightarrow a(-c/a)^3 + b(-c/a) + c = 0$

$\Rightarrow -c^3/a^2 - bc/a + c = 0$

$\Rightarrow a^2 - c^2 = ab \qquad (\because a, c \neq 0)$

$x = 1/y$ எனக.

$a/y^3 + b/y + c = \left(1/y^2 + \frac{p}{y} + 1\right)\left(\frac{a}{y} + c\right)$

(ie) $a + by^2 + cy^3 = (1+py+y^2)(a+cy), \quad \because y \neq 0$

$\therefore cx^3+bx^2+a$ என்பதன் இருபடிக்காரணி x^2+px+1 ஆகும்.

$\therefore ax^3+bx+c, \; cx^3+bx^2+a$ என்பன பொது இருபடிக் காரணியைக் கொண்டுள்ளது

4. ஓர் நிறைவெண் சுட்டி ஒன்றுக்குத் தமோய்வரின் தேற்றத்தைக் கருதிக் கொண்டு, அதன் ஒரு மறை நிறைவெண் சுட்டிக்கு நிறுவுக

(i) மேலே குறிப்பிட்ட தேற்றத்தைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைச் சுருக்குக.

(a) $(\cos 3\theta + i \sin 3\theta)^3 (\cos\theta + i \sin\theta)^2$

(b) $(\cos 2\theta + i \sin 2\theta)(\cos 4\theta - i \sin 4\theta)$

(ii) $(\sqrt{5}+2i)^n$ ஐ $r^n(\cos n\theta + i \sin n\theta)$ என்னும் வடிவத்தில் எடுத்துரைக்க. இங்கு n என்பது நிறைவெண்; θ என்பது $\sin\theta = \frac{2}{3}$ ஆக இருக்கத்தக்கதாக உள்ள ஒரு கூர்ங் கோணம்.

இதிலிருந்து, எல்லா n இற்கும், $(\sqrt{5}+2i)^n + (\sqrt{5}-2i)^n$ மெய்யாகும் என்பதைக் காட்டுக.

$n = 6$ ஆக இருக்கும் போது இக் கோவையின் பெறுமானத்தைக் காண்க

$n \leftarrow$ நேர் நிறை எண் ஆக

$(\cos\theta + i\sin\theta)^n = \cos(n\theta) + i\sin(n\theta)$

$m \leftarrow$ மறை நிறை எண் எனின்.

$\therefore m = -n$ எனின் $(n>0)$

$$\therefore (\cos\theta + i\sin\theta)^m = (\cos\theta + i\sin\theta)^{-n} = \frac{1}{(\cos\theta + i\sin\theta)^n}$$

$$= \frac{1}{\cos n\theta + i\sin n\theta} = \frac{\cos n\theta - i\sin n\theta}{\cos^2 n\theta + \sin^2 n\theta}$$

$$= \cos n\theta - i\sin n\theta$$

$$= \cos(-n)\theta + i\sin(-n)\theta$$

$$= \cos m\theta + i\sin m\theta$$

(ii) (a) $(\cos 3\theta + i\sin 3\theta)^3 (\cos\theta + i\sin\theta)^2$

$$= \left\{(\cos\theta + i\sin\theta)^3\right\}^3 (\cos\theta + i\sin\theta)^2$$

$$= (\cos\theta + i\sin\theta)^{11}$$

$$= \cos 11\theta + i\sin 11\theta$$

(b) $(\cos 2\theta + i\sin 2\theta)(\cos 4\theta - i\sin 4\theta)$

$$= (\cos\theta + i\sin\theta)^2 (\cos\theta + i\sin\theta)^{-4}$$

$$= (\cos\theta + i\sin\theta)^{-2}$$

$$= \cos 2\theta - i\sin 2\theta$$

(iii) $(\sqrt{5} + 2i)^n = 3^n\left(\frac{\sqrt{5}}{3} + \frac{2}{3}i\right)^n$

$$= r^n(\cos\theta + i\sin\theta)^n, \quad \text{இங்கு } r = 3$$

$$= r^n(\cos n\theta + i\sin n\theta) \qquad \cos\theta = \sqrt{5}/3,\ \sin\theta = 2/3$$

$\sin\theta = 2/3$ ஆகுமாறு θ கூர்ங்கோணமாகும்.

$$(\sqrt{5} - 2i)^n = r^n(\cos\theta - i\sin\theta)^n$$

$$= r^n(\cos\theta + i\sin\theta)^{-n}$$

$$(\sqrt{5} + 2i)^n + (\sqrt{5} - 2i)^n = r^n\left\{(\cos\theta + i\sin\theta)^n + (\cos\theta + i\sin\theta)^{-n}\right\}$$

$$= r^n\left\{\cos n\theta + i\sin n\theta + \cos n\theta - i\sin n\theta\right\}$$

$$= r^n \cdot 2\cos n\theta$$

$$= 3^n \cdot 2\cos n\theta$$

$n = 6$ ஆக $3^6 \cdot 2\cos 6\theta$ //

ஆகண் வரிப்படத்தில் z_1, z_2, z_3 என்னும் சிக்கல் எண்கள் முறையே P_1, P_2, P_3 என்னும் புள்ளிகளினால் வகைகுறிக்கப்படுகின்றன. சிக்கல் $\dfrac{z_3-z_1}{z_2-z_1}$ இன் மட்டையும் வீச்சையும் கேத்திரகணித முறையாக விளக்குக.

அதோடு, ஆகண் வரிப்படத்தில் z_1', z_2', z_3' என்னும் சிக்கல் எண்கள் முறையே P_1', P_2', P_3' என்னும் புள்ளிகளினால் வகைகுறிக்கப்படுகின்றன.

$$\frac{z_1'-z_3}{z_2-z_3} = \frac{z_2'-z_1}{z_3-z_1} = \frac{z_3'-z_2}{z_1-z_2} \text{ எனின்}$$

$P_2P_3P_1'$, $P_3P_1P_2'$, $P_1P_2P_3'$ ஆகிய முக்கோணிகள் இயல்பொத்தனவென நிறுவுக.
அதோடு, $P_1P_2P_3$, $P_1'P_2'P_3'$ ஆகிய முக்கோணிகள் ஒரே மையப்போலியை உடையனவெனவும் நிறுவுக.

<u>விடை</u>

$$z = \frac{z_3-z_1}{z_2-z_1}$$

$$|z| = \left|\frac{z_3-z_1}{z_2-z_1}\right| = \frac{|z_3-z_1|}{|z_2-z_1|} = \frac{P_1P_3}{P_1P_2}$$

$$\begin{aligned} \text{வீச்}(z) &= \text{வீச்}(z_3-z_1) - \text{வீச்}(z_2-z_1) \\ &= \theta - \phi \\ &= P_3\hat{P_1}P_2 \end{aligned}$$



$$\frac{z_1'-z_3}{z_2-z_3} = \frac{z_2'-z_1}{z_3-z_1} = \frac{z_3'-z_2}{z_1-z_2}$$

(ii) $\dfrac{P_1'P_3}{P_2P_3} = \dfrac{P_2'P_1}{P_3P_1} = \dfrac{P_3'P_2}{P_1P_2} = \lambda$, (என்க)

(iii) $P_1'\hat{P_3}P_2 = P_2'\hat{P_1}P_3 = P_3'\hat{P_2}P_1 = \alpha$ (என்க)

$\Delta^{கள்}$ $P_1'P_3P_2$, $P_2'P_1P_3$, $P_3'P_2P_1$ இயல்பொத்தவை

$$\frac{z_1'-z_3}{z_2-z_3} = \frac{z_2'-z_1}{z_3-z_1} = \frac{z_3'-z_2}{z_1-z_2} =$$

$$= \underline{(z_1'+z_2'+z_3')-(z_1+z_2+z_3)} \lambda$$

$$\Rightarrow \frac{z_1' + z_2' + z_3'}{3} = \frac{z_1 + z_2 + z_3}{3}$$

$\therefore \Delta$ கள் $P_1P_2P_3$, $P_1'P_2'P_3'$ என்பவற்றின் மையப்போலிகள் பொருந்துகின்றன.

6 (i) ENGINEERING என்னும் சொல்லின் எல்லா எழுத்துக்களையும் பயன்படுத்திச் செய்யத்தக்க வரிசை மாற்றங்களின் எண்ணிக்கையைக் காண்க.
அவற்றுள் எத்தனையில் மூன்று E களும் ஒருமிக்க இருக்கும்? அவை எத்தனை வழிகளில் முதலில் இருக்கும்?

(ii) 32 அட்டைகளைக் கொண்ட தொகுதி ஒன்றில் 8 கறுப்பு நிற அட்டைகளும் 8 சிவப்பு நிற அட்டைகளும் 8 நீல " " 8 பச்சை " " இருக்கின்றன. ஒரே நிறத்தைக் கொண்ட அட்டைகள் யாவும் வித்தியாசமானவை.

(a) தொகுதியிலிருந்து 3 அட்டைகள் எழுமாற்றாகத் தெரிந்தெடுக்கப்படக் கூடிய வெவ்வேறு வழிகளின் எண்ணிக்கையைக் காண்க.

(b) அதே (a) இல் உள்ள தெரிவுகளின் எந்த எண்ணிக்கையில் அட்டைகள் யாவும் வித்தியாசமான நிறங்களைக் கொண்டிருக்கமாட்டா.

(குறிப்பு: கணிப்புப் படிகள் யாவற்றையும் தெளிவாகக் காட்ட வேண்டும்.)

விடை:

ENGINEERING

(i) $E \leftarrow 3$, $N \rightarrow 3$, $G \rightarrow 2$. $I \rightarrow 2$, $R - 1$

எல்லா எழுத்துக்களையும் பயன்படுத்தி வரிசை மாற்றங்களின் எண்ணிக்கை

$$= \frac{11!}{3!\,3!\,2!\,2!} = 277200$$

3E களும் ஒருமிக்கவரும் வரிசைகளின் எண்ணிக்கை

$$= \frac{9!}{3!\,2!\,2!} = 15120$$

3E களும் முதலில் வரும் வரிசைகளின் எண்ணிக்கை

$$= \frac{8!}{3!\,2!\,2!} = 1680$$

(ii) 8 − கறுப்பு   8 − நீலம்

8 − சிவப்பு   8 − பச்சை

(a) 3 அட்டைகள் தெரிவு செய்யப்படும் வழிகளின் எண்ணிக்கை $= {}^{32}C_3 = 4960$

(b) (i) தரப்பட்ட தெரிவுகளில் வித்தியாசமான நிறங்களைக் கொண்டிருக்கும் தெரிவு $({}^8C_1 \times {}^8C_1 \times {}^8C_1) \times {}^4C_3$

$$= 8 \times 8 \times 8 \times 4$$
$$= 2048$$

∴ வித்தியாசமான நிறங்களைக் கொண்டிராத வண்ணம் தெரிவுகளின் எண்ணிக்கை $= 4960 - 2048$

$$= 2912$$

(7) நேர் நிறையெண் சுட்டி ஒன்றுக்கு ஈருறுப்புத் தேற்றத்தைக் கூறி, நிறுவுக.

(i) $\sum_{r=1}^{n} r\,{}^nC_r\, x^{r-1} = n(1+x)^{n-1}$ எனக் காட்டுக.

(ii) $n(1+x)^{n-1}$, $(1+x)^n$ என்பவற்றின் இரு விரிவுகளினதும் பெருக்கத்தை எடுத்து நோக்குவதன் மூலம் $\sum_{r=1}^{n} r({}^nC_r)^2$ ஆனது $n(1+x)^{2n-1}$ இன் விரிவில் உள்ள x^{n-1} இன் குணகத்திற்குச் சமமெனக் காட்டுக

(iii) $\sum_{r=1}^{n} r({}^nC_r)^{2n-1} = \frac{(2n-1)!}{\{(n-1)!\}^2}$ என்பதை உய்த்தறிக.

விடை

$$(1+x)^n = \sum_{r=0}^{n} {}^nC_r\, x^r \quad , \quad n \leftarrow \text{நேர்நிறை எண்.}$$

இங்கு ${}^nC_r = \frac{n!}{(n-r)!\,r!}$ ஆகும்

இம்முடிவு $n=1$ ஆக உண்மையாகும்

$n=p$ ஆக இம்முடிவு உண்மை என்க.

(ie) $(1+x)^p = \sum_{r=0}^{p} {}^pC_r\, x^r$

$$\Rightarrow (1+x)^{p+1} = (1+x)\sum_{r=0}^{p} {}^pC_r\, x^r$$

$$= \sum_{r=1}^{p} ({}^pC_r + {}^pC_{r-1})x^r + {}^pC_0 x^0 + {}^pC_p x^{p+1}$$

$$= 1 + \sum_{r=1}^{p} {}^{p+1}C_r\, x^r + {}^{p+1}C_{p+1}\, x^{p+1}$$

$$= \sum_{r=0}^{p+1} {}^{p+1}C_r\, x^r$$

$n = p+1$ இற்கு இம்முடிவு உண்மையாகும்.

ஆனால் $n=1$ இற்கு இம்முடிவு உண்மையாகும்.

$\therefore$ n இன் எல்லா நேர்முழு எண்களுக்கும் இம்முடிவு கணிதத் தொகுத்தறிவு முறையினால் உண்மையாகும்.

(i) $$(1+x)^n = \sum_{r=0}^{n} {}^nC_r x^r$$

இருபக்கமும் x குறித்து வகையிட

$$n(1+x)^{n-1} = \sum_{r=0}^{n} {}^nC_r\, r\, x^{r-1}$$

$$= \sum_{r=1}^{n} r \cdot {}^nC_r \cdot x^{r-1}$$

(ii) $$(1+x)^n = C_0 + C_1 x + C_2 x^2 + \cdots C_r x^r + \cdots + C_n x^n$$

இருபக்கமும் வகையிட (x குறித்து)

$$n(1+x)^{n-1} = C_1 + 2\cdot C_2 x + \cdots + r\cdot C_r x^r + \cdots + \cdot C_n x^{n-1}$$

$$(x+1)^n = C_0 x^n + C_1 x^{n-1} + \cdots + C_r x^{n-r} + \cdots + C_n$$

$$\Rightarrow C_1^2 + 2\cdot C_2^2 + \cdots + n(C_n)^2$$

$= \{n(1+x)^{n-1}\cdot(x+1)^n\}$ இன் விரிவில் x^{n-1} இன் குணகம்

$= n(1+x)^{2n-1}$ இன் விரிவில் x^{n-1} இன் குணகம்.

(ie) $$C_1^2 + 2\cdot C_2^2 + \cdots + n(C_n)^2 = \sum_{r=1}^{n} r({}^nC_r)^2$$

$\Rightarrow \displaystyle\sum_{r=1}^{n} r({}^nC_r)^2 = n(1+x)^{2n-1}$ இன் விரிவில் x^{n-1} இன் குணகம்

$$= n \cdot {}^{2n-1}C_{n-1}$$

$$= n\cdot\frac{(2n-1)!}{(n-1)!\,n!}$$

$$= \frac{(2n-1)!}{\{(n-1)!\}^2}$$

8. (i) u, v என்பன x இன் வகையிடத்தக்க சார்புகளாயின், u, v அவற்றின் பெருக்கம் ஆகியவற்றின் சார்பில் $\frac{d}{dx}(uv)$ இற்குரிய சூத்திரம் ஒன்றை முதல் கோட்பாட்டிலிருந்து பெறுக.

(ii) $y = \frac{u}{v}$ எனின், மடக்கையை எடுத்துப் பின்னர் வகையிடுவதன் மூலம் $\frac{1}{y}\frac{dy}{dx} = \frac{1}{u}\frac{du}{dx} - \frac{1}{v}\frac{dv}{dx}$ எனக் காட்டுக.

(iii) u களும் V களும் x இன் வகையிடத்தக்க சார்புகளாக இருக்கும் போது $y = \dfrac{v_1 v_2 \cdots v_n}{V_1 V_2 \cdots V_n}$ எனின்

$$\frac{dy}{dx} = y \sum_{i=1}^{n} \left(\frac{1}{u_i} \frac{du_i}{dx} - \frac{1}{V_i} \frac{dV_i}{dx} \right)$$ எனக் காட்டுக

(iv). $\tan^{-1}x$ குறித்து $\tan^{-1}\left(\dfrac{2x}{1-x^2}\right)$ ஐ வகையிடுக.

<u>விடை</u>

(i) $y = vV$

$$\frac{dy}{dx} = \lim_{\delta x \to 0} \left\{ \frac{(v+\delta v)(V+\delta V) - vV}{\delta x} \right\}$$

$$= \lim_{\delta x \to 0} \left\{ v\frac{\delta V}{\delta x} + \frac{V\delta v}{\delta x} + \delta v \cdot \frac{\delta V}{\delta x} \right\}$$

$$= v\frac{dV}{dx} + V\frac{du}{dx} + 0 \cdot \frac{dV}{dx}$$

$$\frac{dy}{dx} = v\frac{dV}{dx} + \frac{Vdu}{dx}$$

(ie) $\dfrac{d}{dx}\{vV\} = v\dfrac{dV}{dx} + V\dfrac{du}{dx}$

(ii) $y = v/V$

$\ln y = \ln v - \ln V$

இருபக்கமும் வகையிட

$$\frac{1}{y}\frac{dy}{dx} = \frac{1}{v}\frac{dv}{dx} - \frac{1}{V}\frac{dV}{dx}$$

(iii) $y = \dfrac{v_1 v_2 v_3 \cdots v_n}{V_1 V_2 V_3 \cdots V_n}$

$$\ln y = \sum_{i=1}^{n} \ln v_i - \sum_{i=1}^{n} \ln V_i$$

$$\frac{1}{y}\frac{dy}{dx} = \sum_{i=1}^{n} \frac{1}{v_i} \cdot \frac{dv_i}{dx} - \sum_{i=1}^{n} \frac{1}{V_i} \frac{dV_i}{dx}$$

$$\frac{dy}{dx} = y \sum \left\{ \frac{1}{v_i} \frac{dv_i}{dx} - \frac{1}{V_i} \frac{dV_i}{dx} \right\}$$

(iv) $y = \tan^{-1}(2x/_{1-x^2})$ $\qquad$ $x = \tan\theta$ எனின்

$= \tan^{-1}(\tan 2\theta)$ $\qquad$ $\theta = \tan^{-1}x$

$y = n\pi + 2\theta$

$\frac{dy}{d\theta} = 2$ // (ie) $\frac{dy}{d\tan^{-1}x} = 2$

9 (i) $\int_0^a f(x)\,dx = \int_0^a f(a-x)\,dx$ எனக் காட்டுக.

இதிலிருந்து $\int_0^\pi x \sin^n x\,dx = \frac{\pi}{2}\int_0^\pi \sin^n x\,dx$ எனக் காட்டுக;

இங்கு n ஒரு நேர் நிறையெண்.

அத்தோடு, $n \geq 2$ இற்கு,

$n\int_0^\pi \sin^n x\,dx = (n-1)\int_0^\pi \sin^{n-2} x\,dx$ எனக் காட்டுக

இதிலிருந்து, $\int_0^\pi x \sin^4 x\,dx$, $\int_0^\pi x \sin^5 x\,dx$ ஆகியவற்றின் பெறுமானம் காண்க.

(ii) $\frac{d}{d\theta} \log_e$ (சீக θ + தான் θ) = சீக θ எனக் காட்டி,

அதனைப் பயன்படுத்தி, $\int \frac{dy}{\sqrt{y^2-1}}$ ஐக் காண்க.

$y = \frac{\sqrt{2x^2+6x+5}}{x+2}$ என்னும் பிரதியீட்டைப் பயன்படுத்தி,

$\int_{-1}^{2} \frac{dx}{(x+2)\sqrt{2x^2+6x+5}}$ இன் பெறுமானம் காண்க.

விடை:

(i) $\int_0^a f(x)\,dx = \int_a^0 F(a-y)(-dy)$, $x = a - y$ என்க

$= -\int_a^0 F(a-y)\,dy = \int_0^a f(a-x)\,dx$

$\int_0^\pi x \sin^n x\,dx = \int_0^\pi (\pi - x)\sin^n(\pi - x)\,dx$

$= \int_0^\pi (\pi - x)\sin^n x\,dx$

$= \pi\int_0^\pi \sin^n x\,dx - \int_0^\pi x \sin^n x\,dx$

(ie) $\int_0^\pi x \sin^n x\,dx = \frac{\pi}{2}\int_0^\pi \sin^n x\,dx$

$$\int_0^{\pi} \sin^n x\,dx = \int_0^{\pi} \sin^{n-1}x \cdot \frac{d}{dx}(-\cos x)\,dx$$

$$= \left(-\sin^{n-1}x\cos x\right)\Big|_0^{\pi} + (n-1)\int_0^{\pi} \cos x \sin^{n-2}x\cos x\,dx$$

$$= (n-1)\int_0^{\pi} \sin^{n-2}x\,(1-\sin^2 x)\,dx \qquad (n \geq 2)$$

i.e) $n\int_0^{\pi} \sin^n x\,dx = (n-1)\int_0^{\pi} \sin^{n-2}x\,dx$

$$I = \int_0^{\pi} x\sin^4 x\,dx = \pi/2 \int_0^{\pi} \sin^4 x\,dx$$

$$= \pi/4\left(\frac{4-1}{4}\right)\int_0^{\pi} \sin^2 x\,dx$$

$$= \pi/2 \cdot \frac{3}{4} \cdot 1/2 \int_0^{\pi} dx = \frac{3}{16}\pi^2$$

$$J = \int_0^{\pi} x\sin^5 x\,dx$$

$$= \pi/2 \int_0^{\pi} \sin^5 x\,dx$$

$$= \frac{\pi}{2}\cdot\frac{4}{5}\cdot\frac{2}{3}\int_0^{\pi} \sin x\,dx$$

$$= \pi \cdot 4/15\left[-\cos x\right]_0^{\pi/2} = 8/15\,\pi.$$

(ii) $\frac{d}{d\theta}\ln(\sec\theta + \tan\theta) = \frac{1}{(\sec\theta + \tan\theta)}(\sec\theta\tan\theta + \sec^2\theta)$

$$= \sec\theta$$

$y = \sec$

$$\int \frac{dy}{\sqrt{y^2-1}} = \int \frac{\sec\theta\tan\theta}{\tan\theta}\,d\theta = \int \sec\theta\,d\theta$$

$$= \ln(\sec\theta + \tan\theta)$$

$$y = \frac{\sqrt{2x^2+6x+5}}{x+2}$$

$$\therefore \frac{dy}{dx} = \frac{(x+2)\dfrac{2x+3}{\sqrt{2x^2+6x+5}} - \sqrt{2x^2+6x+5}\cdot 1}{(x+2)^2}$$

$$= \frac{x+1}{x+2}\,\frac{1}{(x+2)\sqrt{2x^2+6x+5}}$$

இதில்

$$y^2 - 1 = \frac{2x^2+6x+5-(x+2)^2}{(x+2)^2} = \left(\frac{x+1}{x+2}\right)^2$$

$$\frac{dy}{dx} = \sqrt{y^2-1}\;\frac{1}{(x+2)\sqrt{2x^2+6x+5}}$$

$$\int_{-1}^{2}\frac{dx}{(x+2)\sqrt{2x^2+6x+5}} = \int_{1}^{5/4}\frac{dy}{\sqrt{y^2-1}} \qquad \begin{array}{l} x=-1 \rightarrow y=1 \\ x=2 \rightarrow y=5/4 \end{array}$$

$$= \ln(\sec\theta + \tan\theta)\Big|_{\theta_1}^{\theta_2}$$

இங்கு $\sec\theta_1 = 1$, $\sec\theta_2 = 5/4$ ஆகும்.

$$= \ln(5/4 + 3/4) - \ln(1)$$

$$= \ln 2 \quad //$$

(10) $y = \tan^{-1}x$ எனின் $\frac{dy}{dx}$, $\frac{d^2y}{dx^2}$, $\frac{d^3y}{dx^3}$ ஆகியவற்றை x இன் சார்பிற் காண்க. $\tan^{-1}x$ இற்குரிய மக்லோரினின் விரியை x^3 இலான உறுப்பு வரையும் பெறுக. அதோடு எல்லா மெய் x இற்கும் $y = \tan^{-1}x \; (-\frac{\pi}{2} < y < \frac{\pi}{2})$ இன் வரைபைப் பருமட்டாக வரைந்து, வரிப்படத்தின் ஆதியூடாகச் சரிவைக் உடைய அதே வரிப்படத்தில் கோடு $y = kx$ ஐ வரைக; இங்கு k ஒரு மெய் மாறிலி. இதிலிருந்து சமன்பாடு $\tan^{-1}x = kx$ ஆனது

(a) வெவ்வேறு 3 மூலங்களை

(b) ஒரேயொரு மூலத்தைக் கொண்டிருக்கும் k யினுடைய பெறுமானங்களின் வீச்சை எழுதுக.

நீங்கள் $\tan^{-1}x$ இற்குப் பெற்ற மக்லோரினின் விரியைப் பயன்படுத்தி சமன்பாடு $12\tan^{-1}x = 11x$ ஆனது 0.5 இற்கு அண்ணளவாகச் சமமான மூலம் ஒன்றை உடையதெனக் காட்டுக.

விடை:

$y = \tan^{-1}x$ $x = 0$ ஆக $\Rightarrow 0$

$x = 0$ ஆக $\rightarrow 1$

$\frac{dy}{dx} = \frac{1}{1+x^2}$ $x = 0$ ஆக $\Rightarrow 0$

$\frac{d^2y}{dx^2} = \frac{-2x}{(1+x^2)^2}$

$\frac{d^3y}{dx^3} = \frac{-2}{(1+x^2)^2} - \frac{2x(-2)\cdot 2x}{(1+x^2)^3}$, $x = 0$ ஆக $\Rightarrow -2$

$\therefore$ மக்லோரினின் விரி

$$\tan^{-1}x = 0 + \frac{x}{1!} + 0\cdot\frac{x^2}{2!} - \frac{2x^3}{3!} + \cdots = x - \frac{x}{3}$$



$$\frac{dy}{dx} = \frac{1}{1+x^2}, \quad \left(\frac{dy}{dx}\right)_{உயர்வு} = 1$$

∴ அதியுயர் சாய்வு = 1

$\tan^{-1}x = kx$ எனும் சமன்பாட்டைக் கருதுக

(a) 3 மெய்மூலங்கள் இருப்பதற்கு $0 < k < 1$

(b) ஒரு மெய்மூலம் மாத்திரம் இருப்பதற்கு $k \geq 1$ or $k \leq 0$

$12\tan^{-1}x = 11x$

$12(x - x^3/3) = 11x$

(ie) $x(1-4x^2) = 0$

$x = 0$ or $x = \pm 0.5$

∴ அண்ணளவான சமமான மூலம் 0.5

(11) $x = t+1$, $y = t^3 - t$ என்னும் பரமானச் சமன்பாடுகளினால் ஒரு வளையி C தரப்படுகின்றது.

(i) C யின் திரும்பற் புள்ளிகளைக் காண்க, அவை ஒவ்வொன்றிலும் அது ஓர் உயர்வையா, இழிவையா, விபத்தியையா நேரொத்தது என்று கூறுக.

(ii) C யைப் பரும்படியாக வரைக.

(iii) இதிலிருந்து, (a) $x = t^3 - t$, $y = t+1$ என்னும்

பரமானச் சமன்பாடுகளினாலே தரப்படும் வளையி C',

(b) $x = t+1$, $y = |t^3 - t|$ எனினும் பரமானச் சமன்பாடுகளினாலே தரப்படும் வளையி C'' ஆகியவற்றைப் பருமட்டாக வரைக.

விடை :-

(i) $x = t+1 \Longrightarrow \frac{dx}{dt} = 1$

$y = t^3 - t \Longrightarrow \frac{dy}{dt} = 3t^2 - 1$

$\frac{dy}{dx} = \frac{dy}{dt} \cdot \frac{dt}{dx} = \frac{dy}{dt} \Big/ \frac{dx}{dt} = 3t^2 - 1$

$\frac{dy}{dx} = 0$, $t^2 = 1/3 \Longrightarrow t = \pm 1/\sqrt{3}$

$\frac{d^2y}{dx^2} = \frac{d}{dt}\left(\frac{dy}{dx}\right) \Big/ \frac{dx}{dt} = 6t$

$\therefore$ $t = 1/\sqrt{3}$ ஆக, $\frac{d^2y}{dx^2} > 0$

$t = -1/\sqrt{3}$ " $\frac{d^2y}{dx^2} < 0$

$\therefore$ $t = 1/\sqrt{3}$ இல் இழிவு.

$t = -1/\sqrt{3}$ " உயர்வு

திரும்பற் புள்ளிகள்.

(a) $\left(1 + \frac{1}{\sqrt{3}}, -\frac{2\sqrt{3}}{9}\right) \longleftarrow$ இழிவு.

(b) $\left(1 - 1/\sqrt{3}, \frac{2\sqrt{3}}{9}\right) \longleftarrow$ உயர்வு.

(ii) (c) $\frac{dy}{dx} > 0$, $t > 1/\sqrt{3}$ and $t < -\frac{1}{\sqrt{3}}$

< 0, $-1/\sqrt{3} < t < 1/\sqrt{3}$

(d) $t = 0$ ஆக $x = 1$, $y = 0$

(e) $x = 0$, $t = -1$

$y = 0$ $t = 0 \pm 1$

(f) $(x-1)$ உம் y உம் ஒற்றைச் சார்புகள்.

(g) $t \longrightarrow \infty$ ஆக $x \longrightarrow \infty$, $y \longrightarrow \infty$





(12)

பரவளைவு $y^2=4x$, அதிபரவளைவு $x^2-y^2=1$, கோடு $x=4$ ஆகியவற்றை ஒரே வரிப்படத்தில் பரும்படியாக வரைக.

(i) $x^2-y^2-1 \leq 0$ ஆகவும் $y^2-4x \leq$ ஆகவும் இருக்கும் பிரதேசம் S_1 ஐக் காட்டி, S_1 இனால் வரைப்புற்ற பரப்பளவைக் காண்க.

(iii) பரவளைவு $y^2=4x$ இனாலும் கோடு $x=4$ இனாலும் வரைப்புற்ற பிரதேசம் S_2 ஆகும்.
பரப்பளவு S_2 ஐக் கோடு $x=4$ பற்றி நான்கு செங்கோணங்களினூடாகச் சுழற்றுவதன் மூலம் பிறப்பிக்கப்படும் திண்மத்தின் கனவளவைக் காண்க.



(i) $\frac{1}{2}A = \int_0^{2+\sqrt5} y_1\,dx - \int_1^{2+\sqrt5} y_2\,dx$ இங்கு $\left.\begin{array}{l} y_1^2 = 4x \\ x^2 - y_2^2 = 1 \end{array}\right\}$

(ie) $A = 2\int_0^{2+\sqrt5} \sqrt{4x}\,dx - 2\int_1^{2+\sqrt5} \sqrt{x^2-1}\,dx$

$= I_1 - I_2$ (என்க)

$I_1 = 8/3\,(2+\sqrt5)^{3/2}$

$I_2 = 2\left[x\sqrt{x^2-1}\right]_1^{2+\sqrt5} - 2\int_1^{2+\sqrt5} \left\{\sqrt{x^2-1} + \frac{1}{\sqrt{x^2-1}}\right\}dx$

$= (2+\sqrt5)\sqrt{(8+4\sqrt5)} - \ln(2+\sqrt5+\sqrt{8+4\sqrt5})$

$A = 2/3\,\alpha^{3/2} + \ln(\alpha + \sqrt{\alpha^2-1})$; இங்கு $\alpha = 2+\sqrt5$

(ii) தேவையான கனவளவு

$V = \pi\int_{-4}^{4} (4-x)^2 dy$, இங்கு $y^2 = 4x$

$= 2\pi\int_0^4 (4 - y^2/4)^2 dy$

$= 2\pi\left\{16y - 2/3\,y^3 + y^5/80\right\}_0^4$

$= \frac{1024\pi}{15}$ அலகு

ஆனால் $(1-z^2)\dfrac{d^2y}{dz^2} - \dfrac{1}{z}\dfrac{dy}{dz} + z^2 y = 0$ ஆவதால்

$$z^2\frac{d^2y}{dx^2} + z^2 y = 0 \qquad 1 - z^2 \neq 0$$

$$\Rightarrow \frac{d^2y}{dx^2} + y = 0$$

(9)

(i) $x = \pi - y$ என பிரதியீட்டைக் கொண்டு $\displaystyle\int_{\pi/2}^{\pi} \frac{x \sin x}{1+\cos^2 x}\,dx$ ஐ $0, \pi/2$ என்னும் எல்லைகளுக்கிடையே உள்ள தொகையீடாக உருமாற்றுக.
இதிலிருந்து $\displaystyle\int_0^{\pi} \frac{x \sin x}{1+\cos^2 x}\,dx = \frac{\pi^2}{4}$ எனக் காட்டுக

(ii) m, n என்பன நேர் நிறைவெண்கள் (இரட்டையெண்கள்) எனின்

$$\int_0^{\pi/2} x^n \sin(2m+1)x\,dx = (-1)^m \frac{n}{(2m+1)^2}\left(\frac{\pi}{2}\right)^{n-1} - \frac{n(n-1)}{(2m+1)^2}\int_0^{\pi/2} x^{n-2}\sin(2m+1)x\,dx$$

எனக் காட்டுக.
இதிலிருந்து $\displaystyle\int_0^{\pi/2} x^4 \sin 3x\,dx$ இன் பெறுமானம் காண்க

விடை:-

(i) $$I = \int_{\pi/2}^{\pi} \frac{x \sin x}{1+\cos^2 x}\,dx \qquad \begin{aligned} x &= \pi - y \\ dx &= -dy \end{aligned}$$

$$= \int_0^{\pi/2} \frac{(\pi - y)\sin(\pi - y)\,dy}{1+\cos^2 y}$$

$$= \pi\int_0^{\pi/2} \frac{\sin y\,dy}{1+\cos^2 y} - \int_0^{\pi/2} \frac{y \sin y\,dy}{1+\cos^2 y}$$

$$\therefore \int_0^{\pi} \frac{x \sin x}{1+\cos^2 x}\,dx = \int_0^{\pi/2} + \int_{\pi/2}^{\pi} = \pi\int_0^{\pi/2} \frac{\sin y}{1+\cos^2 y}\,dy$$

$$= -\pi \tan^{-1}\cos y\Big]_0^{\pi/2} = \frac{\pi^2}{4}$$

(ii) $$I = \int_0^{\pi/2} x^n \sin(2m+1)x\,dm$$

$$= \frac{x^n \cos(2m+1)x}{-(2m+1)}\Bigg|_0^{\pi/2} + \frac{n}{2m+1}\int_0^{\pi/2} \cos(2m+1)x\, x^{n-1}\,dx$$



CO ஆனது நீண்டு AB ஐ F' இல் சந்திக்கும் என்க.

$\therefore$ AD, BE, CF' ஒரு புள்ளியில் சந்திக்கின்றன.

$\therefore$ மேலுள்ள முடிவின்படி

$$\frac{BD}{DC}\cdot\frac{CE}{EA}\cdot\frac{AF'}{F'B}=1$$

ஆனால் எனக் கொள்ளப்பட்டது $\frac{BD}{DC}\cdot\frac{CE}{EA}\cdot\frac{AF}{FB}=1$

$$\Longrightarrow \frac{AF'}{F'B}=\frac{AF}{FB}$$

$\Longrightarrow F'=F$ $\quad\therefore$ AD, BE, CF ஒரு புள்ளி O இல் சந்திக்கின்றன.





அமைப்பு :- $C'Z \parallel AB$ ஆகுமாறு Z என்னும் புள்ளி $A'B'$ இல் உண்டு (என்க).

நிறுவல் :- $BE \parallel A'C'$, $BD \parallel A'X$, $OD \parallel C'X$

$$\Longrightarrow \Delta BOD \,|||\, \Delta A'C'X$$

$$\therefore \frac{BD}{OD}=\frac{A'X}{C'X} \quad \text{—— ①}$$

இதேபோல் $\Delta COD \,|||\, \Delta A'B'X$

$$\Longrightarrow \frac{DC}{OD}=\frac{A'X}{XB'} \quad \text{—— ②}$$

$$① \,\&\, ② \Longrightarrow \frac{BD}{DC}=\frac{B'X}{XC'} \quad \text{—— ③}$$

$|||^{ly}$ $\frac{CE}{EA}=\frac{C'Y}{YA'}$ —— ④

$$\frac{AF}{FB}=\frac{A'Z}{ZB'} \quad \text{—— ⑤}$$

$$③,④,⑤ \Longrightarrow \frac{BD}{DC}\cdot\frac{CE}{EA}\cdot\frac{AF}{FB}=\frac{B'X}{XC'}\cdot\frac{C'Y}{YA'}\cdot\frac{A'Z}{ZB'}$$

$$\Rightarrow \frac{B'X}{XC'}\cdot\frac{C'Y}{YA'}\cdot\frac{A'Z}{ZB'}=1 \qquad \left\{\because \frac{BD}{DC}\cdot\frac{CE}{EA}\cdot\frac{AF}{FB}=1\right\}$$

$\therefore$ $A'X$, $B'Y$, $C'Z$ ஒரு புள்ளியினூடாகச் செல்லும்.

(ie) $C'Z$, G இனூடாகச் செல்லும்

(ie) $C'G \parallel AB$ ஆகும்.

(2)



$ABCDA'B'C'D'$ ஒரு சதுரமுகி. இதன் விளிம்புகள் ஒவ்வொன்றும் நீளம் a யை உடையவை. ஒரு புள்ளி P ஆனது விளிம்பு $BB' = \lambda \cdot PB'$ ஆக இருக்கத்தக்கதாக உள்ளது. கோடு AD' ஐயும் புள்ளி P யையும் கொண்ட தளம் விளிம்பு $B'C'$ ஐ Q வில் சந்திக்கின்றது.

$C'Q = \lambda \cdot QB'$ எனக் காட்டுக.

அதோடு a, λ ஆகியவற்றின் சார்பில்

(a) PQ வின் நீளம் (b) $\cos A\hat{P}Q$

(c) $APQD'$ இன் பரப்பளவு ஆகியவற்றைக் காண்க.

விடை:

தளம் $APQD'$ ஆனது சமாந்தரத் தளங்கள் $ADD'A'$, $BCC'B'$ என்பவற்றை AD', PQ இல் இடைவெட்டுகின்றன.

$\Rightarrow AD' \parallel PQ$

அத்துடன் $AD' \parallel BC'$

$\Rightarrow PQ \parallel BC'$

$$\therefore \lambda = \frac{BP}{PB'} = \frac{C'Q}{QB'}$$

$$\Rightarrow C'Q = \lambda QB'$$

(a) $\frac{PQ}{BC'} = \frac{PB'}{BB'} \Rightarrow PQ = \left(\frac{PB'}{BB'}\right)BC'$

$$= \left(\frac{1}{1+\lambda}\right)\sqrt{2}\,a$$

(b) $\cos A\hat{P}Q = \dfrac{AP^2 + PQ^2 - AQ^2}{2AP \cdot PQ}$

$$PB = \frac{\lambda}{1+\lambda}, \quad BB' = \frac{\lambda}{1+\lambda}a, \quad QB' = \frac{1}{1+\lambda}a$$

$$\therefore AP^2 = a^2 + \left(\frac{\lambda a}{1+\lambda}\right)^2$$

$$AQ^2 = AB^2 + BB'^2 + QB'^2 = 2a^2 + \frac{a^2}{(1+\lambda)^2}$$

$$\cos A\hat{P}Q = \frac{\left\{a^2 + \left(\frac{\lambda a}{1+\lambda}\right)^2\right\} + \frac{2a^2}{(1+\lambda)^2} - 2a^2 - \frac{a^2}{(1+\lambda)^2}}{2a^2\sqrt{1 + \frac{\lambda^2}{(1+\lambda)^2}} \; \frac{\sqrt{2}}{1+\lambda}}$$

$$= \frac{-\lambda}{\sqrt{2}\sqrt{1+2\lambda+2\lambda^2}}$$

(c) $APQD'$ இன் பரப்பு $= \frac{1}{2}(AD' + PQ)\, AP \sin A\hat{P}Q$

$$= \frac{1}{2}\left(a\sqrt{2} + \frac{a\sqrt{2}}{1+\lambda}\right) a \left(1 + \frac{\lambda^2}{(1+\lambda)^2}\right)^{1/2} \sin A\hat{P}Q$$

$$\sin A\hat{P}Q = \sqrt{1 - \cos^2 A\hat{P}Q}$$

$$\therefore \text{பரப்பு} = \frac{1}{2}\,\frac{a^2(\lambda+2)\sqrt{2}}{(1+\lambda)^2}\left\{2\lambda^2 + 2\lambda + 1\right\}^{1/2} \frac{\sqrt{3\lambda^2+4\lambda+2}}{\sqrt{2}\sqrt{1+2\lambda+2\lambda^2}}$$

$$= \frac{a^2(\lambda+2)}{(1+\lambda)}\sqrt{3\lambda^2+4\lambda+2}$$

(3) கோடு $ax+by+c=0$ இற்கு புள்ளி (x_1, y_1) இன் விம்பத்தைக் காண்க.
ABCD ஒரு சாய்சதுரம். இங்கு $B \equiv (1, 0)$; AB, AC ஆகிய வரிகளின் சமன்பாடுகள் முறையே $y - x + 1 = 0$, $y - 3x = 0$ ஆகும். DA, CD, BC ஆகியவரிகளின் சமன்பாடுகளைக் காண்க. அத்தோடு, சாய்சதுரம் ABCD யின் பரப்பளவையும் காண்க.

விடை:



$P_1'(x_1', y_1')$, P_1 இன் விம்பம் என்க

$$\frac{x_1' - x_1}{a} = \frac{y_1' - y_1}{b} = t \text{ (பரமானம்) (என்க)}$$

$$\therefore \left.\begin{aligned} x_1' &= x_1 + at \\ y_1' &= y_1 + bt \end{aligned}\right\}$$

P_1P_1' இன் நடுப்புள்ளி $Q \equiv \left\{ x_1 + \frac{at}{2} , y_1 + \frac{bt}{2} \right\}$

தரப்பட்ட கோடு $ax + by + c = 0$ இல் அமைவதால்

$$a(x_1 + at/2) + b(y_1 + bt/2) + c = 0$$

$$t = \frac{-2(ax_1 + by_1 + c)}{(a^2 + b^2)}$$

$$\therefore P_1' \equiv \left\{ x_1 - \frac{2a}{a^2+b^2}(ax_1 + by_1 + c) , y_1 - \frac{2b}{a^2+b^2}(ax_1 + by_1 + c) \right\}$$



$$D \equiv \left\{ 1 - \frac{2(-3)(-3)}{10} , 0 - \frac{2 \cdot 1 \cdot (-3)}{10} \right\}$$

$$\equiv \{-4/5 , 3/5\}$$

$DC \Rightarrow \quad y - x = 3/5 + 4/5$

(ie) $\quad 5y - 5x - 7 = 0$

A இன் ஆள்கூறுகள் $\left.\begin{aligned} y - 3x &= 0 \\ y - x + 1 &= 0 \end{aligned}\right\} \rightarrow (-1/2 , -3/2)$

$$AD \Rightarrow \frac{y + 3/2}{x + 1/2} = \frac{3/5 + 3/2}{-4/5 + 1/2}$$

(ie) $y + 7x + 5 = 0$

$BC \Rightarrow y + 7x = 0 + 7 = 7$

(ie) $y + 7x - 7 = 0$

BD இன் நடுப்புள்ளி $G \equiv (1/10 , 3/10)$

சாய்சதுரம் ABCD இன் பரப்பு $= 4 \Delta AGB$

$= 2\, AG \cdot GB$

$= 2\sqrt{0.6^2 + 1.8^2} \cdot \sqrt{0.9^2 + 3^2}$

$= 2 \times 2 (0.3^2 + 0.9^2)$

$= 3.6$ அலகு.

④ வட்டம் $x^2 + y^2 + 2gx + 2fy + c = 0$ மீதுள்ள Q_1, Q_2 என்னும் இரு புள்ளிகளிலான தொடலிகள் $P_0 \equiv (x_0, y_0)$ இற் சந்திக்கின்றன. புள்ளி P_0 இனது தொடுகை நாண் $Q_1 Q_2$ இன் சமன்பாடு $xx_0 + yy_0 + g(x + x_0) + f(y + y_0) + c = 0$ எனக் காட்டுக.

$x^2 + y^2 + 6y + 5 = 0$, $x^2 + y^2 + 2x + 8y + 5 = 0$

என்னும் வட்டங்களின் இருந்தும் புள்ளி $(1, -2)$ இன் தொடுகை நாண்கள் பொருந்துமென நிறுவுக.

அதேபோல, அவ்வட்டங்களின் இருந்து தொடுகை நாண்கள் ஒரே நாண்களாக இருக்கும் வேறொரு புள்ளி இருக்கிறதெனவும் காட்டி, அதன் ஆள்கூறுகளைக் காண்க.

<u>விடை:-</u>

$Q_1 \equiv (x_1, y_1)$, $Q_2 \equiv (x_2, y_2)$ என்க.

Q_1 இல் தொடலி

$xx_1 + yy_1 + g(x + x_1) + f(y + y_1) + c = 0$

இது P_0 இனூடு செல்வதால்

$x_0 x_1 + y_0 y_1 + g(x_0 + x_1) + f(y_0 + y_1) + c = 0$ —①

||ly $x_0 x_2 + y_0 y_2 + g(x_0 + x_2) + f(y_0 + y_2) + c = 0$ —②

① & ② $\Rightarrow x_0 x + y_0 y + g(x_0 + x) + f(y_0 + y) + c = 0$

இல் $Q_1(x_1, y_1)$, $Q_2(x_2, y_2)$ அமைகின்றது.

(ie) $Q_1 Q_2$ இன் சமன்பாடு

$xx_0 + yy_0 + g(x + x_0) + f(y + y_0) + c = 0$

$x^2 + y^2 + 6y + 5 = 0$ இற்கு $(1, -2)$ இலிருந்தான தொடலிகளின் தொடுகை நாண்

$x - 2y + 3(y - 2) + 5 = 0 \implies x + y - 1 = 0$

$x^2 + y^2 + 2x + 8y + 5 = 0$ இற்கு தொடுகை நாண்

$x - 2y + (x + 1) + 4(y - 2) + 5 = 0$

$\implies x + y - 1 = 0$

இரு தொடுகை நாண்களும் பொருந்துகின்றன.

(x_0, y_0) இலிருந்தான தொடுகை நாண்கள் ஒன்றுடன் பொருந்துகின்றன என்க

(ie) $xx_0+yy_0+3(y+y_0)+5=0$ உம்
$xx_0+yy_0+(x+x_0)+4(y+y_0)+5=0$ உம் பொருந்தும்
போது

$$\Rightarrow \left.\begin{array}{l} x_0x+(y_0+3)y+3y_0+5=0 \\ (x_0+1)x+(y_0+4)y+x_0+4y_0+5=0 \end{array}\right\}$$ என்பன ஒரே கோட்டைக் குறிக்கின்றன

$$\therefore \frac{x_0+1}{x_0}=\frac{y_0+4}{y_0+3}=\frac{x_0+4y_0+5}{3y_0+5}$$

$$\therefore x_0=y_0+3=\frac{3y_0+5}{x_0+y_0}=\frac{3x_0-4}{2x_0-3}$$

$\therefore x_0=1$ OR 2

$$\left.\begin{array}{l} x_0=1 \\ y_0=-2 \end{array}\right\} \text{ OR } \left.\begin{array}{l} x_0=2 \\ y_0=-1 \end{array}\right\}$$

$\therefore$ (2,-1) இலிருந்தான தொடலிகளின் நாண்கள் பொருந்துகின்றன.

(5) (i) முனைவு O விலிருந்து நடப்பட்ட (O வினூடாகச் செல்லாத) நேர்கோடு l இற்குள்ள செங்குத்தானது தொடக்கக் கோட்டுடன் ஒரு கோணம் α வில் சாய்ந்துள்ளது. இதன் நீளம் d ஆகும். l இன் சமன்பாடு $r=d\sec(\theta-\alpha)$ எனக் காட்டுக.

இதிலிருந்து, $r\cos\theta=3$, $r\sin\theta=4$ ஆகிய இரு சமன்பாடுகளும் இரு நேர்கோடுகளை வகைகுறிக்கின்றன என்னக் காட்டி,

(a) அவற்றுக்கிடையே உள்ள கோணம்.

(b) அவை இடைவெட்டும் புள்ளியின் முனைவு ஆள்கூறுகள்

ஆகியவற்றைக் காண்க.

(ii) பின்வரும் வளையிகளை ஒரே வரிப்படத்தில் பருமட்டாக வரைக.

(a) $\frac{x^2}{4}+y^2-1=0$ (b) $x^2-4y=0$

(c) $y-x+1=0$

$\frac{x^2}{4}+y^2-1\leq 0$, $x^2-4y\geq 0$, $y-x+1\geq 0$

ஆகியவற்றைத் திருப்தியாக்கும் $x-y$ தளத்தில் உள்ள பிரதேசம் R ஐக் காட்டுக. R இல் x^2+y^2 இன் அதியுயர் பெறுமானத்தைப் பெறுக.

விடை:

(i)



$\therefore \Delta OPN$ இல்

$r = d \sec(\theta - \alpha)$

$r \cos\theta = 3 \implies r = 3 \sec\theta$ இங்கு $d = 3, \alpha = 0$

ஒரு நேர் கோடாகும்

$r \sin\theta = 4 \implies r = 4 \sec\{\theta - \pi/2\}$

$d = 4, \quad \alpha = \pi/2$

இது ஒரு நேர் கோடாகும்



(a) அவற்றுக்கிடையிலுள்ள கோணம் $\pi/2$

(b) $(5, \tan^{-1} 4/3)$

(ii) $C_1 : x^2/4 + y^2 - 1 = 0$

அரைப் பேரியச்சு $= 2$
அரைச் சிறியச்சு $= 1$ } உடைய நீள்வளையம்.

$C_2 : x^2 - 4y = 0$

$(0, 0) \leftarrow$ உச்சி
$(0, 1) \leftarrow$ குவியம் } உடைய பரவளைவு

$C_3 : y - x + 1 = 0$

$1 \leftarrow$ படித்திறன்
$-1 \leftarrow$ வெட்டுத்துண்டு } உடைய நேர்கோடு.

C_1, C_2 இடைவெட்டும் புள்ளிகள் $\left(\pm\sqrt{-2 + 2\sqrt{5}}, \frac{-1 + \sqrt{5}}{2}\right)$

C_2, C_3 " " " $(2, 1)$

C_3, C_1 " " " $(0, -1), (8/5, 3/8)$



R இனுள்ள x^2+y^2 இன் அதியுயர் பெறுமானம் $(-2)^2+0^2=4$

(6) பரவளைவு $y^2=4ax$ இற்கு $(at_1^2, 2at_1), (at_2^2, 2at_2)$ ஆகிய இரு புள்ளிகளிலும் உள்ள இரு தொடலிகளும் இடைவெட்டும் புள்ளி $\{at_1t_2, a(t_1+t_2)\}$ எனக் காட்டுக.

$(at^2, 2at)$ இல் உள்ள தொடலியானது $P \equiv (aT^2, 2aT)$ இல் உள்ள தொடலியுடன் ஒரு கோணம் α வை ஆக்குமெனின், t ஆனது சமன்பாடு

$$t^2(1-T^2\,\text{தான்}^2\alpha) - 2Tt\,\text{சீக}^2\alpha + T^2 - \text{தான்}^2\alpha = 0$$

ஐத் திருப்திப்படுமெனக் காட்டுக.

அத்தகைய இரு தொடலிகள் இருக்கின்றன என்பதை உய்த்தறிந்து, அவை இடைவெட்டும் புள்ளி Q வின் ஆள்கூறுகள் T, α ஆகியவற்றின் சார்பிற் காண்க. PQ வின் சமன்பாடு

$$y - 2aT = -\frac{2T}{1-T^2}(x-aT^2)$$

எனவும் பரவளைவு மீது P இயங்கும்போது நிலைத்த புள்ளி ஒன்றினூடாக PQ செல்கின்றதெனவும் காட்டுக.

தீர்வு:—

$P_1(at_1^2, 2at_1)$ இலுள்ள தொடலியின் சாய்வு $= \left(\frac{dy}{dx}\right)_{P_1} = \frac{2a}{2at_1}$

$= 1/t_1$

P_1 இலுள்ள தொடலி $\Rightarrow y - \frac{1}{t_1}x = 2at_1 - at_1$

(i.e) $t_1y - x = at_1^2$

மற்றைய தொடலி $t_2 y - x = a t_2^2$

$\therefore$ [illegible] $\{a t_1 t_2, \ a(t_1 + t_2)\}$ —— (A)

$$\tan\alpha \ \left|\frac{1/t - 1/T}{1 + 1/tT}\right| = \left|\frac{T-t}{Tt+1}\right|$$

i.e) $(1+Tt)^2 \operatorname{Tan}^2\alpha = T^2 - 2tT + t^2$

$\therefore t^2(1 - T^2 \operatorname{Tan}^2\alpha) - 2Tt\sec^2\alpha + T^2 - \operatorname{Tan}^2\alpha = 0$ —— (B)

இது t இல் இருபடிச்சமன்பாடு.

மூலங்கள் t_1, t_2 ஆகும் என்க.

$$t_1 + t_2 = \frac{2T\sec^2\alpha}{1 - T^2\operatorname{Tan}^2\alpha}$$

$$t_1 t_2 = \frac{T^2 - \operatorname{Tan}^2\alpha}{1 - T^2\tan^2\alpha}$$

$$\therefore Q \equiv \{a t_1 t_2, \ a(t_1 + t_2)\}$$

$$\equiv \left\{a\left(\frac{T^2 - \operatorname{Tan}^2\alpha}{1 - T^2\tan^2\alpha}\right), \ \frac{a \cdot 2T\sec^2\alpha}{1 - T^2\tan^2\alpha}\right\}$$

$$M_{PQ} = \frac{2aT\sec^2\alpha - 2aT(1 - T^2\tan^2\alpha)}{a(T^2 - \tan^2\alpha) - aT^2(1 - T^2\tan^2\alpha)} = \frac{2T}{T^2 - 1}$$

PQ இன் சமன்பாடு

$$\frac{y - 2aT}{x - aT^2} = \frac{2T}{T^2 - 1} = \frac{-2T}{1 - T^2} = \frac{0 - 2aT}{a - aT^2}$$

$\therefore$ PQ $(a, 0)$ என்னும் நிலையான புள்ளிக்கூடாகச் செல்லும்

(7) புள்ளி $P \equiv \left\{\frac{a(1-t^2)}{1+t^2}, \ \frac{2bt}{1+t^2}\right\}$ ஆனது நீள்வளையம் $x^2/a^2 + \frac{y^2}{b^2} = 1$ மீது இருக்கின்றதெனக் காட்டுக.

அத்தோடு, நீள்வளையத்துக்கு P யில் உள்ள தொடலியின் சமன்பாடு

$b(1-t^2)x + 2aty = (1+t^2)ab$ எனவுங்காட்டுக.

நீள்வளையத்தின் மீதுள்ள புள்ளி Q ஆனது $\left\{\frac{-2at}{1+t^2}, \ \frac{b(1-t^2)}{1+t^2}\right\}$ என்னும் ஆள்கூறுகளை உடையது. Q இல் உள்ள தொடலியின் சமன்பாட்டைப் பெறுக.

அதோடு, t மாறும்போது, (a) OP^2+OQ^2,
(b) Δ OPQ வின் பரப்பளவு ஆகியன மாறாமல் இருக்கின்றதெனவும் காட்டுக. இங்கு O என்பது உற்பத்தியாகும். நீள்வளையத்துக்கு P யிலும் Q விலும் உள்ள தொடலிகள் T யில் ஒன்றையொன்று சந்திக்கின்றன. t மாறும்போது T ஆனது வேறொரு நீள்வளையத்தின் மீது கிடக்கின்றதென நிறுவுக.

<u>விடை.</u>

$$P \equiv \left\{\frac{a(1-t^2)}{1+t^2}, \frac{2bt}{1+t^2}\right\}$$

$t = \tan \theta/_2$ எனின்

$$P \equiv \{a\cos\theta, b\sin\theta\}$$

இது $x^2/_{a^2} + y^2/_{b^2} = 1$ என்பதைத் திருப்தி செய்யும்.

~~(x_1,y_1) இல் தொடலியின் சாய்வு~~ $= \left.\frac{-b^2x}{a^2y}\right)_{(x_1,y_1)} = \frac{-b^2}{a^2}\frac{x_1}{y_1}$

$\therefore$ தொடலியின் சமன்பாடு.

$$(y-y_1)a^2y_1 = -b^2x_1(x-x_1)$$

$$\Longrightarrow \frac{xx_1}{a^2} + \frac{yy_1}{b^2} = 1$$

$\Longrightarrow$ P இல் தொடலி

$$x/_a\left(\frac{1-t^2}{1+t^2}\right) + \frac{2ty}{b(1+t^2)} = 1$$

$$\therefore b(1-t^2)x + 2aty = (1+t^2)ab$$

Q இலுள்ள தொடலி

$$\frac{-x}{a}\cdot\frac{2t}{1+t^2} + \frac{y}{b} = \left(\frac{1-t^2}{1+t^2}\right) = 1$$

$$\therefore -2btx + a(1-t^2)y = (1+t^2)ab$$

(a) $OP^2+OQ^2 = a^2\left\{\frac{1-t^2}{1+t^2}\right\}^2 + \frac{4b^2t^2}{(1+t^2)^2} + \frac{4a^2t^2}{(1+t^2)^2} + b^2\left(\frac{1-t^2}{1+t^2}\right)^2$

$= (a^2+b^2) =$ மாறிலி

(b) $P \equiv (x_1,y_1)$; $Q \equiv (x_2,y_2)$

$\Delta\ OPQ = \frac{1}{2}|x_1y_2 - y_1x_2|$

$= \frac{1}{2}\left|ab\left(\frac{1-t^2}{1+t^2}\right)^2 + \frac{4abt^2}{(1+t^2)}\right| = \frac{1}{2}ab =$ constant

P இலும் Q இலும் உள்ள தொடலிகள் இடைவெட்டும் புள்ளி $T \equiv (x, y)$ எனின்.

$$x = \frac{a}{1+t^2}(1-t^2-2t)$$

$$y = \frac{b}{1+t^2}(1-t^2-2t)$$

$$\left\{ \frac{x}{a}(t^2+1) \right\}^2 + \left\{ \frac{y}{b}(t^2+1) \right\}^2 = 2(1-t^2)^2 + 2 \cdot 4t^2$$
$$= 2(1+t^2)^2$$

$$\Rightarrow \frac{x^2}{2a^2} + \frac{y^2}{2b^2} = 1$$

இது இன்னுமொரு நீள்வளையமாகும்.

(8)

அதிபரவளைவு $x^2 - y^2 = a^2$ இன் மையவகற்சித் திறனைக் கண்டு S, S' என்னும் குவியங்களின் ஆள்கூறுகள் எழுதுக.
அதோடு S, S' ஆகியவற்றை ஒத்த செலுத்திகளின் சமன்பாடுகளையும் எழுதுக.
தக்க ஆள்கூற்று அச்சுகளின் தொகுதியைத் தெரிந்தெடுத்து, அதிபரவளைவின் சமன்பாடு $xy = \frac{a^2}{2}$ எனக் காட்டி, இரு குவியங்களினதும் ஆள்கூறுகளையும் ஒத்த செலுத்திகளையும் எழுதுக.

செங்கோண அதிபரவளைவு ஒன்றின் ஒரு குவியம் S இலிருந்து இரு அணுகு கோடுகளுக்கும் உள்ள செங்குத்துக்களின் அடிகள் L, M என்பனவாகும். S ஐ ஒத்த செலுத்தி LM ஆகுமென நிறுவுக.

கோடு SL ஆனது அதிபரவளைவை N இல் சந்திக்குமெனின், அதிபரவளைவுக்கு N இல் உள்ள தொடலியானது M இனூடாகச் செல்கின்றதெனக் காட்டுக.

விடை

$$\frac{x^2}{a^2} - \frac{y^2}{b^2} = 1$$

மையவகற்சித்திறன் e எனின்

$a^2 = a^2(e^2-1)$ $\qquad S' = (-a\sqrt{2}, 0)$

(ie) $e = \sqrt{2}$

$\therefore S \equiv (a\sqrt{2}, 0)$

S க்கு ஒத்த செலுத்தி $x = a/\sqrt{2}$

S' " " $x = -a/\sqrt{2}$



அணுகு கோடுகள் அச்சுக்களாகத் தெரிவுசெய்ய

$P \equiv (X, Y)$ எனின்

$x = \dfrac{X + Y}{\sqrt{2}}$, $y = \dfrac{Y - X}{\sqrt{2}}$ இங்கு $X = ON$ $Y = NP$

$x = OM$, $y = MP$

$\Longrightarrow x^2 - y^2 = a^2 \Longrightarrow XY = a^2/2$

$\therefore$ அதிபரவளைவின் சமன்பாடு $xy = a^2/2$ எனலாம்.

இவ்வகையால் $S \equiv (a, a)$, $S' \equiv (-a, -a)$

செலுத்திகள் S இற்கு ஒத்தது $y + x = a$

S' " " $y + x = -a$



$L \equiv (a, 0)$, $M \equiv (0, a)$

LM இன் சமன்பாடு $\dfrac{y - 0}{x - a} = -1$

இஃது S இற்கு ஒத்த செலுத்தியாகும்.

$N \equiv (a, a/2)$

$xy = a^2/2 \Longrightarrow \dfrac{dy}{dx} = \dfrac{-a^2}{2x^2}$

N இல் தொடலியின் படித்திறன் $= -1/2$

N இல் தொடலியின் சமன்பாடு

$y - a/2 = -1/2\,(x - a)$

இது $(0, a)$ ஐத் திருப்தி செய்கின்றது

(c) N இல் தொடலி M இனூடாகச் செல்லும்.

9 பின்வரும் சமன்பாடுகளைத் தீர்க்க.

(i) $5\cos\theta + 12\sin\theta = \dfrac{13}{2}$

(ii) $\tan x + \tan 2x + \tan 3x = 0$

(iii) $\tan^{-1}\left(\dfrac{y-1}{y-2}\right) + \tan^{-1}\left(\dfrac{y+1}{y+2}\right) = \dfrac{\pi}{4}$

<u>விடை</u> :-

(i) $5\cos\theta + 12\sin\theta = 13/2$

$\dfrac{5}{13}\cos\theta + \dfrac{12}{13}\sin\theta = 1/2$

$\sin(\theta + \alpha) = 1/2$ இங்கு $\cos\alpha = 12/13$

$\theta = n\pi + (-1)^n \pi/6 - \alpha$ $\qquad \sin\alpha = 5/13$

$n = 0 \pm 1 \pm 2 \pm ---$

(ii) $\tan 3x = \dfrac{\tan x + \tan 2x}{1 - \tan x \tan 2x}$ என்பதால்

$\tan x + \tan 2x + \tan 3x = 0$

$\Rightarrow \tan 3x\{1 - \tan x \tan 2x\} + \tan 3x = 0$

$\Rightarrow \tan 3x\{2 - \tan x \tan 2x\} = 0$

$\Rightarrow \tan 3x = 0$ OR $\tan x \tan 2x = 2$

$3x = n\pi$ OR $\dfrac{2\tan^2 x}{1 - \tan^2 x} = 2$

$x = n\pi/3$

$n = 0 \pm 1 \pm 2$

$\tan^2 x = 1/2$

$\tan x = \pm 1/\sqrt{2}$

$x = m\pi \pm \alpha$

$\alpha = \tan^{-1}(1/\sqrt{2})$

தீர்வுகள் $x = n\pi/3,\ m\pi \pm \alpha,\ m, n = 0 \pm 1 \pm 2 \ldots$

(iii) $\tan^{-1}\left(\frac{y-1}{y-2}\right) + \tan^{-1}\left(\frac{y+1}{y+2}\right) = \pi/4$

$\alpha = \tan^{-1}\left(\frac{y-1}{y-2}\right)$, $\beta = \tan^{-1}\left(\frac{y+1}{y+2}\right)$ எனின்.

$\Rightarrow \alpha + \beta = \pi/4$

$\Rightarrow \tan(\alpha + \beta) = 1$

(ie) $$\frac{\frac{y-1}{y-2} + \frac{y+1}{y+2}}{1 - \frac{y-1}{y-2} \cdot \frac{y+1}{y+2}} = 1$$

(ie) $(y-1)(y+2) + (y+1)(y-2) = (y^2-4) - (y^2-1)$

(ie) $y^2 = 1/2 \Longrightarrow y = \pm 1/\sqrt{2}$

(10) (i) வழக்கமான குறிப்பீட்டுடன் ஒரு முக்கோணி ABC யாதிற்கு

$\frac{\sin A}{a} = \frac{\sin B}{b} = \frac{\sin C}{c}$ எனக் காட்டுக.

$a - b = kc$ எனின்

$\sin\frac{A-B}{2} = k\cos\frac{C}{2}$ எனவும்.

$\frac{k\sin A}{1 - k\cos B} = \tan\frac{A-B}{2}$ எனவும் காட்டுக.

(ii) கோணம் $\theta\ (>0)$ என்பது $\theta = \frac{2\sqrt{bc}}{b+c}\cos A/2$ என்னும் தொடர்பினால் தரப்படுகின்றது. இங்கு A, b, c ஆகிய குறியீடுகள் ஒரு முக்கோணி ABC யிற்குப் பிரயோகிக்கப்படுகின்றவாறு அவற்றின் வழக்கமான கருத்துக்களை உடையன $a = (b+c)\sin\theta$ என நிறுவுக

விடை



$A < \pi/2$ $\qquad$ $A = \pi/2$ $\qquad$ $A > \pi/2$

$a\sin B = b = b\sin A$

$b\sin A = NC = a\sin B$

$$a\sin B = b\sin C\hat{A}N = b\sin(\pi - A) = b\sin A$$

(1e) $b\sin A = a\sin B$ (3 வகைகளிலும்)

$$\frac{\sin A}{a} = \frac{\sin B}{b} = \frac{\sin C}{c} \quad \text{——①}$$

$$a - b = kc$$

$$\Rightarrow \sin A - \sin B = k\sin C \quad (\because ① \text{ இலிருந்து})$$

$$\therefore 2\sin\left(\frac{A-B}{2}\right)\cos\left(\frac{A+B}{2}\right) = 2k\sin C/2 \cos C/2$$

$$\therefore \sin\left(\frac{A-B}{2}\right) = k\cos C/2 \quad \because \cos\frac{A+B}{2} = \cos\left(\frac{\pi - C}{2}\right) = \sin C/2$$

$$\frac{k\sin A}{1 - k\cos B} = \frac{\frac{a-b}{c}\sin A}{1 - \frac{a-b}{c}\cos B}$$

$$= \frac{(a-b)\sin A}{c - a\cos B + b\cos B}$$

$$= \frac{(a-b)\sin A}{b\cos A + b\cos B}$$

$$= \frac{\sin A - \sin B}{\sin B} \cdot \frac{\sin A}{\cos A + \cos B}$$

$$= \frac{\sin A}{\sin B} \cdot \frac{2\sin\frac{A-B}{2} \cdot \cos\frac{A+B}{2}}{2\cos\frac{A+B}{2} \cdot \cos\frac{A-B}{2}}$$

$$= a/b \tan\left(\frac{A-B}{2}\right)$$

(ii) $$\cos\theta = \frac{2\sqrt{bc}}{b+c}\cos A/2$$

$$\therefore \sin^2\theta = 1 - \frac{4bc}{(b+c)^2}\cos^2 A/2$$

$$\therefore (b+c)^2\sin^2\theta = b^2 + c^2 + 2bc - 4bc\cos^2 A/2$$

$$= b^2 + c^2 - 2bc\cos A$$

$$= a^2$$

$$\therefore (b+c)\sin\theta = a$$

(1) கழுத்துப் பட்டிகள் உற்பத்தி செய்பவர் ஒருவர் கல்லூரிகளில் கல்வி கற்கும் நோக்குடன் கழுத்துப்பட்டிகளைப் புதிய பாணியில் உற்பத்தி செய்வதற்கு உத்தேசித்தார். மாணவர்களின் மாதிரி ஒன்றின் அளவீடுகள் அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட கழுத்தின் பரிதி பற்றிய தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன

கழுத்துப் பருமானம் (அங்குலம்)	மாணவர்களின் எண்ணிக்கை.
12.5	4
13.0	19
13.5	30
14.0	63
14.5	66
15.0	29
15.5	18
16.0	1
16.5	1

கழுத்துப் பட்டியினது அளவின் சராசரியையும் நியம விலகலையும் கணிக்க. கழுத்துப்பட்டியின் அளவு அண்ணளவாகச் செவ்வனப் பரம்பலை உடையதெனக் கொண்டு, அவர் தமது வாடிக்கையாளர்களில் 95% ஆனோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உற்பத்தி செய்ய வேண்டிய கழுத்துப்பட்டிகளின் கூடிய பெரிய அளவையும் ஆகக் குறைந்த அளவையும் கணிக்க.

விடை:-

கழுத்துப் பருமானம் (அங்குலம்)	மாணவர் எண்ணிக்கை				
x	f	$y = x - 14.5$	Fy	y^2	Fy^2
12.5	4	-2	-8.0	4.00	16.00
13.0	19	-1.5	-28.5	2.25	42.7
13.5	30	-1.0	-30.0	1.00	30.00
14.0	63	-0.5	-31.5	0.25	15.75
14.5	66	0.0	0.0	0.00	0.00
15.0	29	0.5	14.5	0.25	7.25
15.5	18	1.0	18.0	1.00	18.00
16.0	1	1.5	1.5	2.25	2.25
16.5	1	2.0	2.0	4.00	4.00
	231		-62.0		136.00

இடை $\bar{y} = \frac{-62.0}{231} = -0.268$

$\bar{x} = 14.5 + \bar{y} = 14.5 - 0.268 = 14.232$

x இன் மாறற்றிறன் $=$ y இன் மாறற்றிறன் $= \frac{1}{231}\left\{136 - \frac{(-62)^2}{231}\right\}$

$= \frac{1}{231}\left\{136 - \frac{3844}{231}\right\}$

$= \frac{1}{231}\left\{136 - 16.641\right\} = \frac{119.359}{231} = 0.517$

நியம விலகல் = $S = \sqrt{0.517} = 0.719$

கீழ்ப் பெறுமானம் $= \bar{x} - 2S = 14.232 - 1.438 = 12.794$

உயர்வுப் " $= \bar{x} + 2S = 14.232 + 1.438 = 15.670$

(12) குறித்த கம்பனி ஒன்று அதற்குத் தேவையான உபகரணப் பொருள்களுக்காக A, B, C என்னும் மூன்று விநியோகத்தர்களிடம் வரவழைத்தற் கட்டளைகள் அனுப்புகின்றது.

(அ) ~~மூன்று விநியோகத்தர்களும் கட்டளை ஒன்றைப் பெறுவதற்கான நேர்தகவுகள்~~ சமமாக இருப்பின்,

(ஆ) B, C ஆகிய விநியோகத்தர்கள் கட்டளை ஒன்றைப் பெறுவதற்கான நேர்தகவு சமமாக இருக்கும் அதேவேளை விநியோகத்தர் A கட்டளை ஒன்றைப் பெறுவதற்கான நேர்தகவு மற்றைய இரு விநியோகத்தர்களில் ~~எவரேனும் ஒருவர் கட்டளை ஒன்றைப்~~ பெறுவதற்கான நேர்தகவைப் போன்று இருமடங்காக இருக்குமெனின்

விநியோகத்தர் A கட்டளை ஒன்றைப் பெறுவதற்கான நிகழ்தகவைக் காண்க.

கம்பனி ஒரு மாதிரியான 10 கட்டளைகள் அளிக்க விரும்புகின்றது எனக் கொள்க. கம்பனி எந்த ஒரு விநியோகத்தருக்கும் அளிக்கும் கட்டளைகளின் எண்ணிக்கைக்கு மட்டுப்பாடு எதுவுமில்லையெனக் கொள்க,

(i) ஒவ்வொரு விநியோகத்தரும் கட்டளைகளில் யாதாயினும் ஒன்றைப் பெறுவதற்கான நேர்தகவு சமமாக இருப்பின்.

(ii) B, C ஆகிய விநியோகத்தர்கள் கட்டளைகளில் யாதாயினும் ஒன்றைப் பெறுவதற்கான நேர்தகவுகள் சமமாக இருக்கும் அதே வேளை விநியோகத்தர் A கட்டளைகளில் யாதாயினும் ஒன்றைப் பெறுவதற்கான நேர்தகவு மற்றைய இரு விநியோகத்தர்களில் எவரேனும் ஒருவர் கட்டளைகளில் யாதாயினும் ஒன்றைப் பெறுவதற்கான நேர்தகவைப் போன்று இருமடங்காக இருக்குமெனின்,

விநியோகத்தர் A சரியாக $r\ (\leq 10)$ கட்டளைகளைப் பெறுவதற்கான நிகழ்தகவைக் காண்க.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விநியோகத்தர் A பெறும் கட்டளைகளின் சராசரி எண்ணிக்கையைக் காண்க.

விடை

$P(A) = P_r$ [A பெறும் கட்டளைகள்]

$P(B) = P_r$ [B " "]

$P(C) = P_r$ [C " "]

(அ) $P(A) = P(B) = P(C)$

$P(A) + P(B) + P(C) = 1$

$\Rightarrow P(A) = 1/3$

(ஆ) $P(A) = 2P(B) = 2P(C) = p$ (எனின்)

$P(A) + P(B) + P(C) = p + \frac{1}{2}p + \frac{1}{2}p = 1$

$p(A) = 1/2$

θ என்பது A பெறும் கட்டத்தின் நிகழ்தகவு எனின.

X என்பது A பெறும் கட்டத்தின் எண்ணிக்கை எனின

$$P_r(X = x) = {}^{10}C_x\, \theta^x (1-\theta)^{10-x} \; ; \quad x = 0, 1, 2, \ldots$$

(a) $\theta = 1/3$

$$P_r(X = r) = {}^{10}C_r\, (1/3)^r (2/3)^{10-r}$$

b) $\theta = 1/2$

$$P_r(X = r) = {}^{10}C_r\, (1/2)^{10}$$

A பெறும் சராசரி கட்டங்கள் $= 10\theta = n$ (say)

(a) $\theta = 1/3$, $n = 10 \times 1/3 = 3.33 \simeq 3$

(b) $\theta = 1/2$, $n = 10 \times 1/2 = 5$

end.

12. $B_1, B_2, B_3, B_4, B_5, W_1, W_2, W_3$ எனக் குறிக்கப்பட்ட 5 கறுப்புப் பந்துகளையும் 3 வெள்ளைப் பந்துகளையும் ஒரு பெட்டி கொண்டுள்ளது. பதிலீடு செய்யப்படாமல் பெட்டியிலிருந்து இரு பந்துகள் (அடுத்தடுத்து) எடுக்கப்படுகின்றன

a) இரு பந்துகளும் ஒரே நிறத்தைக் கொண்டனவாய் இருப்பதற்கான

b) குறைந்தபட்சம் ஒரு பந்து கறுப்பாய் இருப்பதற்கான

நிகழ்தகவுகளைக் காண்க

இரு பந்துகள் மீதும் உள்ள எண்களின் கூட்டுத் தொகையைக் குறிக்கும் எழுமாற்று மாறியை X என்க. X இன் நிகழ்தகவுப் பரம்பலைக் கண்டு X இன் இடை, மாறற்றிறன் ஆகியவற்றின் பெறுமானங்களைக் கணிக்க

<u>விடை</u>

a) $\frac{5c_2}{8c_2} + \frac{5c_2}{8c_2} = \frac{20+3}{8 \cdot \frac{7}{2}} = \frac{23}{28}$

b) $1 - P_r$ (எல்லாம் வெள்ளை)

$1 - \frac{3c_2}{8c_2} = 1 - \frac{3}{28}$

$= \frac{25}{28}$

x_i	2	3	4	5	6	7	8	9
$f(x_i)$	$\frac{1}{28}$	$\frac{4}{28}$	$\frac{5}{28}$	$\frac{6}{28}$	$\frac{5}{28}$	$\frac{4}{28}$	$\frac{2}{28}$	$\frac{1}{28}$

$$\mu = E(x) = \sum x_i f(x_i) = 2\times\frac{1}{28} + 3\cdot\frac{4}{28} + \frac{4\times 5}{28} + 5\cdot\frac{6}{28} + \frac{6\times 5}{28} + 7\times\frac{4}{28} + 8\times\frac{2}{28} + 9\times\frac{1}{28}$$

$$= 5.25$$

$$Var(X) = \sum x_i^2 f(x_i) - \mu^2$$

$$= 3.36$$

TCYA

உயர் கல்விப் பதிப்பகம்.

36, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தூய கணிதம் 1. க.பொ.த (உயர் தரம்) மாதிரி விடைகள். ஓகஸ்ட், 1990. (விசேட 1991).

ஆறு வினாக்களுக்கு விடை தருக.

1 (i) $$\left\{\frac{n(n+1)}{2}\right\}^2 - \left\{\frac{(n-1)n}{2}\right\}^2 \equiv n^3$$

$$\tfrac{1}{2}(n+\tfrac{1}{2})^3 - \tfrac{3}{8}(n+\tfrac{1}{2}) + \tfrac{1}{2}(n-\tfrac{1}{2})^3 - \tfrac{3}{8}(n-\tfrac{1}{2}) \equiv n^3$$

என்னும் சர்வசமன்பாடுகளை வாய்ப்புப் பார்த்து, அவற்றைப் பயன்படுத்தி

$$\sum_{r=1}^{n} r^3, \quad \sum_{r=1}^{n} (-1)^{r-1} r^3$$ ஆகியவற்றைக் காண்க.

(iii) கணிதத் தொகுத்தறிவுக் கோட்பாட்டைப் பயன்படுத்தி $2^{2n+1} - 9n^2 + 3n - 2$ என்பது 54 இன் ஒரு மடங்காகுமென நிறுவுக.

விடை:-

$$|z - z_0| = R \Rightarrow |(x + iy) - (x_0 + iy_0)| = R$$

$$\text{(ie) } |(x - x_0) + i(y - y_0)| = R$$

$$\text{(ie) } \sqrt{(x - x_0)^2 + (y - y_0)^2} = R$$

$$\Rightarrow (x - x_0)^2 + (y - y_0)^2 = R^2$$

இது (x_0, y_0) ஐ மையமாகவும் R ஆரையுமுடைய வட்டமாகும்.

(ie) z_0 இல் மையமாகும் R ஆரையுடைய வட்டமாகும்.



(i) $B \equiv (3\cos \pi/3 , 3\sin \pi/3)$

$B \equiv (\cos \pi/3 + i\sin \pi/3)$

$= 3/2 + 3\sqrt{3}/2\, i$

$C \equiv (3\cos 2\pi/3 , 3\sin 2\pi/3)$

$\equiv 3(\cos 2\pi/3 + i\sin 2\pi/3)$

$= -3/2 + 3\sqrt{3}/2\, i$

(ii) ΔBOC ஒரு சமபக்க Δ ஆதலால் அதனூடான வட்டத்தின் மையம் மையப்போலியாகும்.

(ie) $\frac{1}{3}\{3/2 + i 3\sqrt{3}/2) + 0 + (-3/2 + i\, 3\sqrt{3}/2) = \sqrt{3}\, i$

ஆரை $\sqrt{3}$

$\therefore \Delta BOC$ இனூடான வட்டம் $|z - \sqrt{3}\, i| = \sqrt{3}$

(iii)

$B' \equiv 3\{\cos(\pi/3 - \pi/4) + i\sin(\pi/3 - \pi/4)\}$

$\equiv 3(\cos \pi/12 + i\sin \pi/12)$

$C' \equiv 3\{\cos(2\pi/3 - \pi/4) + i\sin(2\pi/3 - \pi/4)\}$

$\equiv 3(\cos 5\pi/12 + i\sin 5\pi/12)$

6

(a) OBSEQUIOUSNESS இன் எல்லா எழுத்துக்களும் இருக்கும் ஒழுங்குகளின் எண்ணிக்கைகள்

(i) எழுத்துக்களின் ஒழுங்கில் எவ்வித கட்டுப்பாடும் இல்லாதிருக்கும் பொழுது காண்க.

(ii) Q என்னும் எழுத்தை எப்பொழுதும் U தொடரும் பொழுது காண்க.

(b) 14 ஆண்பிள்ளைகளையும் 12 பெண் பிள்ளைகளையும் உடைய வகுப்பொன்றில் இருந்து 3 ஆண் பிள்ளைகளையும் 3 பெண் பிள்ளைகளையும் கொண்ட குழுவொன்றைத் தெரிந்தெடுக்கக்கூடிய வழிகளின் எண்ணிக்கை காண்

(i) எவ்வித கட்டுப்பாடும் இல்லாத பொழுது காண்க.

(ii) ஒரு குறித்த ஆண்பிள்ளையும் ஒரு குறித்த பெண் பிள்ளையும் ஒருங்கு சேவை செய்ய விரும்பாத பொழுது காண்க.

விடை

6 (a) OBSEQUIOUSNESS

O – 2, B – 1, S – 4, E – 2, Q – 1

U – 2, I – 1, N – 1

(i) $\dfrac{14!}{2!\,4!\,2!\,2!}$ (ii) $\dfrac{13!}{2!\,4!\,2!}$

(b) 14 ஆண்களிலிருந்து 3 ஆண்கள் தேர்வு செய்யும் வழிகளின் எண்ணிக்கை = $^{14}C_3$

12 பெண்களிலிருந்து 3 பெண்கள் தெரிவு செய்யும் வழிகளின் எண்ணிக்கை = $^{12}C_3$

∴ (i) $^{14}C_3 \times {}^{12}C_3$

(ii) $^{14}C_3 \times {}^{12}C_3 - {}^{13}C_2 \times {}^{11}C_2$

(7) ஒரு நேர் நிறை எண் சுட்டிக்கு ஈருறுப்புத் தேற்றத்தை எழுதி நிறுவுக.

(i) $x = 4$ ஆக இருக்கும் போது $(10+3x)^{15}$ இன் விரிவிலுள்ள அதியுயர் உறுப்பினைக் காண்க.

(ii) $\dfrac{d}{dx}\dfrac{1}{x}(1+x)^n = -\dfrac{1}{x^2}(1+x)^n + \dfrac{n}{x}(1+x)^{n-1}$ என்னும் முடிபைப் பாவித்து வேறுவிதமாக

$$\sum_{r=1}^{n-1} r\,{}^nC_{r+1} = 1 + (n-2)2^{n-1}$$ எனக் காட்டுக.

விடை:-

$(1+x)^n = \sum_{r=0}^{n} {}^nC_r x^r$, $n \leftarrow$ நேர் முழு எண்.

இங்கு $^nC_r = \dfrac{n!}{(n-r)!\,r!}$

$n = 1$ ஆக $LHS = 1 + x$

$RHS = \sum_{r=0}^{1} {}^1C_r x^r = 1 + x$

$n = p$ ஆகும் போது இக்கூற்று உண்மையெனக் கொள்க.

$(1+x)^p = \sum_{r=0}^{p} {}^pC_r x^r$

$$\therefore (1+x)^{p+1} = (1+x)\sum_{r=0}^{p} {}^{p}C_r x^r$$

$$= \sum_{r=1}^{p}\left({}^{p}C_r + {}^{p}C_{r-1}\right)x^r + {}^{p}C_0 x^0 + {}^{p}C_p x^{p+1}$$

$$= 1 + \sum_{r=1}^{p} {}^{p+1}C_r x^r + {}^{p+1}C_{p+1} x^{p+1}$$

$$= \sum_{r=0}^{p+1} {}^{p+1}C_r x^r$$

$\therefore n = p+1$ க்கும் எல்லாப் பெறுமானங்களுக்கும் கூற்று உண்மை.

(i) $(10+3x)^{15} = \sum_{r=1}^{16} T_r$

$$\frac{T_{r+1}}{T_r} = \frac{16-r}{r-1}\,\frac{12}{10} \quad ; \quad x = 4$$

$\therefore T_{r+1} \gtrless T_r \iff r \lesseqgtr 8\ 8/11$

$\therefore T_{r+1} > T_r \ , \ r \leq 8$

மிகப் பெரிய உறுப்பு $= T_9 = {}^{15}C_8\, 10^7\, 12^8$

(ii) $\frac{d}{dx}\frac{1}{x}(1+x)^n = -1/x^2(1+x)^n + \frac{n}{x}(1+x)^{n-1}$ —— (A)

LHS of (A) $= \frac{d}{dx}\sum_{r=0}^{n} {}^{n}C_r x^{r-1}$

$$= \sum_{r=0}^{n} {}^{n}C_r (r-1) \quad \text{—— (B)}$$

(A), (B) இலிருந்து $x = 1$ ஆக

$$-1 + \sum_{r=2}^{n} {}^{n}C_r (r-1) = -2^n + n.2^{n-1}$$

(ie) $\sum_{r=1}^{n-1} r\, {}^{n}C_{r+1} = 1 + (n-2)\, 2^{n-1}$

8 (i) தொடர் கோவைகளிலிருந்து $\frac{\tan x}{x}$ இன் பெறுமதியைக் காண்க.

(ii) a, b ஆகியன மாறிலிகளாக இருக்கும்போது தான்$^{-1}\left(\frac{a - b\sin x}{b + a\sin x}\right)$ ஐ x குறித்து வகையிடுக. விடையை இயலும் எளிய வடிவத்திலே தருக.

(iii) y என்பது x இன் ஒரு சார்பாகும்

$x = \sin\theta$ $\frac{d^2y}{dx^2}$ ஐ $\frac{dy}{d\theta}$, $\frac{d^2y}{d\theta^2}$ ஆகியவற்றின் சார்பில் எடுத்துரைக்க.

$$(1-x^2)\frac{d^2y}{dx^2} - x\frac{dy}{dx} + ky = 0 \text{ எனின்}$$

$$\frac{d^2y}{d\theta^2} + ky = 0 \text{ என நிறுவுக.}$$

விடை:

$$\frac{dy}{dx} = \lim_{\delta x \to 0} \frac{f(x+\delta x) - f(x)}{\delta x}, \text{ இங்கு } y = f(x)$$

(i) $$\frac{d}{dx}\frac{\tan x}{x} = \lim_{\delta x \to 0} \frac{\frac{\tan(x+\delta x)}{x+\delta x} - \frac{\tan x}{x}}{\delta x}$$

$$= \lim_{\delta x \to 0} \frac{x\{\tan(x+\delta x) - \tan x\} - \delta x \tan x}{x(x+\delta x)\delta x}$$

$$= \lim_{\delta x \to 0} \frac{x}{x(x+\delta x)\delta x} \cdot \frac{\sin(x+\delta x)\cos x - \cos(x+\delta x)\sin x}{\cos x \cos(x+\delta x)} - \frac{\tan x}{x(x+\delta x)}$$

$$= \lim_{\delta x \to 0} \frac{1}{(x+\delta x)} \cdot \frac{1}{\cos x \cdot \cos(x+\delta x)} \cdot \frac{\sin \delta x}{\delta x} - \frac{\tan x}{x(x+\delta x)}$$

$$= \frac{1}{x} \cdot \frac{1}{\cos^2 x} \cdot 1 - \frac{\tan x}{x^2}$$

$$= \frac{\sec^2 x}{x} - \frac{\tan x}{x^2}$$

(ii) $$y = \tan^{-1}\left(\frac{a - b\sin x}{b + a\sin x}\right)$$

$$\frac{dy}{dx} = \frac{1}{1+\left(\frac{a-b\sin x}{b+a\sin x}\right)^2} \cdot \frac{(b+a\sin x)(-b\cos x) - (a-b\sin x)(a\cos x)}{(b+a\sin x)^2}$$

$$= \frac{1}{(a^2+b^2)(1+\sin^2 x)}\left\{-(a^2+b^2)\cos x\right\} = \frac{-\cos x}{1+\sin^2 x}$$

(iii) $$\frac{dy}{dx} = \frac{dy}{d\theta} \cdot \frac{d\theta}{dx} = \frac{1}{\cos\theta}\frac{dy}{d\theta}$$

$$\frac{d^2y}{dx^2} = \frac{d}{d\theta}\left(\frac{1}{\cos\theta}\cdot\frac{dy}{d\theta}\right)\frac{d\theta}{dx} = \left(\frac{\sin\theta}{\cos^2\theta}\frac{dy}{d\theta} + \frac{1}{\cos\theta}\cdot\frac{d^2y}{d\theta^2}\right)\frac{1}{\cos\theta}$$

$$= \frac{1}{\cos\theta}\left\{\tan\theta\frac{dy}{d\theta} + \frac{d^2y}{d\theta^2}\right\}$$

$$(1-x)^2\frac{d^2y}{dx^2} = \frac{x}{\sqrt{1-x^2}}\frac{dy}{d\theta} + \frac{d^2y}{d\theta^2}$$

$$-\frac{x\,dy}{dx} = -\sin\theta\times\frac{1}{\cos\theta}\cdot\frac{dy}{d\theta}$$

$$ky = ky$$

கூட்ட $(1-x^2)\frac{d^2y}{dx^2} - \frac{x\,dy}{dx} + ky = 0$

(9)

(i) $x(1-x)^2 = (1+x^2)(x-2)+2$ என்பதையும்

$x^4(1-x)^4 = (1+x^2)(x^6-4x^5+5x^4-4x^2+4)-4$

என்பதையும் வாய்ப்புப் பார்க்க.

மேற்தரப்பட்ட முடிபுகளைப் பாவித்து

$\int_0^1 \frac{x(1-x)^2}{1+x^2}dx$ இனதும் $\int_0^1 \frac{x^4(1-x)^4}{1+x^2}dx$ இனதும்

பெறுமானங்களைக் காண்க.

$3 < \pi < \frac{22}{7}$ என உய்த்தறிக.

(ii) n என்பது ஒர் நேர் நிறை எண்ணாகும்பொழுது....

$$\int சைன்^3\theta\ கோசை^n\theta\, d\theta = \frac{2}{3+n}\int \sin\theta\cos^n\theta\, d\theta - \frac{\sin^2\theta\cos^{n+1}\theta}{3+n}$$

என நிறுவுக

இதிலிருந்து $\int_0^{\pi/2} \sin^3\theta\cos^3\theta\, d\theta$ இன் பெறுமானத்தைக் காண்க.

உமது விடையை $\int_0^1 x^3(1-x^2)\,dx$ இனது தொகையீட்டைக் கருதி சரிபார்க்க.

விடை:-

(i) $x(1-x)^2 = (1+x^2)(x-2)+2$

$x^4(1-x)^4 = (1+x^2)(x^6-4x^5+5x^4-4x^2+4)-4$

$$\int_0^1 \frac{x(1-x)^2}{1+x^2} = \int_0^1\left(x-2+\frac{2}{1+x^2}\right)dx$$

$$= \frac{(x-2)^2}{2}\Big|_0^1 + 2\tan^{-1}x\Big|_0^1 = \pi/2 - 3/2$$

$$\int_0^1 \frac{x^4(1-x)^4}{(1+x^2)} = \int_0^1 (x^6 - 4x^5 + 5x^4 - 4x^2 + 4)\,dx - \int_0^1 \frac{4}{1+x^2}\,dx$$

$$= \frac{x^7}{7} - \frac{4x^6}{6} + \frac{5x^5}{5} - \frac{4x^3}{3} + 4x\Big|_0^1 - 4\tan^{-1}x\Big|_0^1$$

$$= \frac{22}{7} - \pi$$

$\frac{x(1-x)^2}{1+x^2}, \frac{x^4(1-x)^4}{(1+x^2)}$ என்பவை $(0,1)$ ஆயிடையில் நேராகும்.

$\therefore \pi/2 - 3/2 > 0, \quad \frac{22}{7} - \pi > 0$

$\Rightarrow 3 < \pi < 22/7$

(ii) $I = \int \sin^3\theta \cos^n\theta\, d\theta = \int \sin^2\theta \frac{d}{d\theta}\left(\frac{-\cos^{n+1}\theta}{n+1}\right) d\theta$

$$= -\frac{\sin^2\theta \cos^{n+1}\theta}{n+1} + \frac{2}{n+1}\int \cos^{n+1}\theta \sin\theta\, d\theta$$

$$(n+1) I = -\sin^2\theta \cos^{n+1}\theta + 2\int \sin\theta(1-\sin^2\theta)\cos^n\theta\, d\theta$$

$$I = \frac{2}{n+3}\int \sin\theta\cos^n\theta\, d\theta - \frac{\sin^2\theta\cos^{n+1}\theta}{(n+3)}$$

$n=3$ எனின் $I_3 = \int_0^{\pi/2} \sin^3\theta\cos^3\theta\, d\theta = 2/6\left[-\frac{\cos^4\theta}{4}\right]^{\pi/2} = 1/12$

$x = \sin\theta, \quad dx = \cos\theta\, d\theta$

$\therefore I_3 = \int_0^1 x^3(1-x^2)\,dx = \left[x^4/4 - x^6/6\right]_0^1 = 1/12$

(10) (i) $f(x) = \sin x,\ g(x) = \cos x$ எனின்

$f^{(n)}(x) = f\left(x + \frac{n\pi}{2}\right)$ எனவும்

$g^{(n)}(x) = g\left(x + \frac{n\pi}{2}\right)$ எனவும் காட்டுக.

இங்கு $f^{(n)}(x)$, $g^{(n)}(x)$ என்பன முறையே $f(x)$ இனதும் $g(x)$ இனதும் n ஆவது பெறுதியாகும்.

பூச்சியமல்லாத முதல் 5 உறுப்புகள் வரை, $\sin x$ இனதும் $\cos x$ இனதும் மக்லோரின் விரிவுகளை பெறுக.

அண்ணளவாக $\sin 20^\circ = \pi/9 - \pi^3/4374$ எனக்காட்டுக.

(ii) [illegible] உரிய ஈருறுப்புத் தேற்றத்தை பாவித்து x^4 இயான உறுப்பு வரை விரிக்க. -

$\left(\frac{1+x^2}{1-x}\right)^{2/3}, |x|<1$

விடை:

$f(x) = \sin x$

$f^{(1)}_{(x)} = \cos x = \sin(x + \pi/2)$

$f^{(2)}_{(x)} = \cos(x + \pi/2) = \sin(x + 2\pi/2)$

$\vdots$

$F^{(n)}_{(x)} = \sin(x + n\pi/2) = f(x + n\pi/2)$

$g(x) = \cos x$

$g^{(1)}_{(x)} = -\sin x = \cos(x + \pi/2)$

$g^{(2)}_{(x)} = -\cos x = \cos(x + 2\pi/2)$

$g^{n}(x) = \cos(x + n\pi/2)$
$= g(x + n\pi/2)$

$f^{(n)}_{(0)} = f(0 + n\pi/2) = \sin \frac{n\pi}{2}$

$g^{(n)}(0) = g(0 + n\pi/2) = \cos n\pi/2$

$f(x) = f(0) + x f^{(1)}(0) + \frac{x^2}{2!} f^{(2)}(0) + \cdots\cdots$

$\sin x = x - x^3/3! + x^5/5! - x^7/7! + \cdots\cdots$

$\cos x = 1 - x^2/2! + x^4/4! - x^6/6! + \cdots$

$20^\circ = \pi/9$

$\sin 20 = \sin \pi/9 = \pi/9 - 1/3!\,(\pi/9)^3$
$= \frac{\pi}{9} - \frac{7^3}{4374}$

(ii) $\left(\frac{1+x^2}{1-x}\right)^{2/3} = (1+x^2)^{2/3}(1-x)^{-2/3}$
$= \left(1 + 2/3\, x^2 + \frac{2/3(2/3-1)x^4}{2!} + \cdots\right)(\cdots\cdots)$

$\left(1 + \frac{(-2/3)(-x)}{1!} + \frac{(-2/3)(-5/3)(-x)^2}{2!} + \cdots\cdots\right)$

$= 1 + 2/3\, x + 11x^2/3 + 76/81\, x^3 + \frac{173}{243}x^4 \cdots\cdots$

(11) $x = 2t^2 - t^4$

$y = 3t^2 + 2t^3, \quad -\infty < t < \infty$

எனும் பரமானச் சமன்பாடுகளால் ஒரு வளையி வரையறுக்கப் பட்டுள்ளது.
பரமானம் t ஐ உள்ள புள்ளியில், வளையியின் தொடலிகளினதும் செவ்வன்களினதும் சமன்பாடுகளைக் காண்க.
குறிப்பாக $t = -1, 0, 1$ எனும் பெறுமானங்களுக்கு இவற்றின் சமன்பாடுகளைத் தருக.
$t \geq 0$, $t \leq 0$ என்பவற்றுக்கு ஒத்த வளையியின் இரு கிளைகளை வெவ்வேறான படங்களில் பருமட்டாக வரைக.

$$x = 2t^2 - t^4 \Longrightarrow \frac{dy}{dx} = 4t(1-t^2) = 4t(1-t)(1+t)$$

$$y = 3t^2 + 2t^3 \Longrightarrow \frac{dy}{dx} = 6t(1+t)$$

$$\frac{dy}{dx} = \frac{dy}{dt} \Big/ \frac{dx}{dt} = \frac{6t(1+t)}{4t(1+t)(1-t)}; \ (t \neq 0, -1, 1)$$

$$= \frac{3}{2(1-t)}, \ t \neq 0, -1, 1$$

't' இல் உள்ள தொடலியின் சமன்பாடு,

$$y - (3t^2 + 2t^3) = \frac{3}{2(1-t)} \{x - (2t^2 - t^4)\}, \ t = 0, -1, 1$$

செவ்வனின் சமன்பாடு

$$y - (3t^2 + 2t^3) = \frac{2(t-1)}{3} \{x - (2t^2 - t^4)\}, \ t \neq 0, -1, 1$$

$t \to -1, \ \frac{dy}{dx} = \frac{3}{4}$

தொடலியின் சமன்பாடு $y - 1 = \frac{3}{4}(x-1)$

செவ்வனின் சமன்பாடு $y - 1 = -\frac{4}{3}(x-1)$

$t \to 0, \ \frac{dy}{dx} = \frac{3}{2}$

தொடலி — $y = \frac{3}{2}x$

செவ்வன் — $y = -\frac{2}{3}x$

$t \to 1$ ஆக $\frac{dy}{dx} \to \infty$

∴ தொடலி $x - 1 = 0$

செவ்வன் $y - 5 = 0$

t	$-\infty$	$-3/2$	0	1	$\sqrt{2}$	2	∞
x	$-\infty$	$-9/16$	0	1	0	-8	$-\infty$
y	$-\infty$	0	0	5	$2(3+2\sqrt{2})$	20	∞

$\frac{dy}{dx} = \frac{3}{2(1-t)}$, $\frac{dy}{dx} > 0$, $t < 1$

$\frac{dy}{dx} < 0$, $t > 1$

$\therefore$ $t<1$ ஆக x அதிகரிக்க y அதிகரிக்கும்.

$t>1$ " x " y குறைவடையும்.



$t \geq 0$



(12) (i) $y = x/4 + 1/x^2$ என்ற சமன்பாட்டையுடைய [illegible] வளையியை பருமட்டாக வரைக.

வளையியாலும், கோடுகள் $x = 1$, $x = a (>1)$,

$y = \frac{x}{4}$ என்பனவற்றாலும் வரைப்புற்ற பரப்பைக் காண்க.

a முடிவிலியை நாட இப்பரப்பைப் பற்றி உங்களால் என்ன கூறமுடியும்?

(ii) வளையி $y = 2x - x^2$ ஆலும் அச்சினாலும் அடைக்கப்பட்ட பரப்பளவு y அச்சு பற்றி நான்கு செங்கோணங்களால் சுழற்றப்படுகின்றது.

பெறப்படும் கனஅளவு $\frac{8\pi}{3}$ எனக் காட்டுக.

விடை -

(i)



$x = 1,\ x = a,\ y = x/4$, வளையி என்பவற்றால் உள்ளடக்கப்பட்ட பரப்பு

$$A = \int_1^a \left(x/4 + 1/x^2 - x/4\right) dx = \int_1^a dx/x^2$$

$= 1 - 1/a$ அலகு

$a \to \infty,\ A \to 1$

(ii)



தேவையான கனவளவு

$$V = \pi \int_0^1 x_2^2\, dy - \pi \int_0^1 x_1^2\, dy$$

$$= \pi \int_2^1 x^2(2-2x)\, dx - \pi \int_0^1 x^2(2-2x)\, dx$$

$$= \pi \left[\tfrac{2}{3} x^3 - x^4/2 \right]_2^1 - \pi \left[\tfrac{2}{3} x^3 - x^4/2 \right]_0^1$$

$$= \pi \left[17/6 - 1/6 \right]$$

$= 8\pi/3$ அலகு //

உரிமை பதிப்பகத்தாருக்குரியது!

உயர் கல்விப் பதிப்பகம்.

36, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தூய கணிதம் II. க.பொ.த (உயர் தரம்) மாதிரி விடைகள். ஓகஸ்ட், 1990.

ஆறு வினாக்களுக்கு விடை தருக.

1. ABC ஒரு முக்கோணி. DEF என்பது ஒரு நேர் கோடு. முக்கோணியின் பக்கங்கள் AB, BC, CA என்பவற்றை முறையே D, E, F என்னும் புள்ளிகளில் இடைவெட்டுகின்றது.

$$\frac{AD}{DB}\cdot\frac{BE}{EC}\cdot\frac{CF}{FA} = -1$$ என்னும் மெனிலோசின் தேற்றத்தை நிறுவுக. மேற்கூறப்பட்ட தேற்றத்தின் மாறுதலையும் கூறுக.

PQR, P'Q'R' என்பன இரு தளமான முக்கோணிகளாகும்.
QR, Q'R' என்னும் கோடுகள் X இற் சந்திக்கின்றன.
RP, R'P' " " Y " ".
PQ, P'Q' " " Z இல் இடைவெட்டுகின்றன.
PP', QQ' " " O " " ".
X, Y, Z " புள்ளிகள் ஒரே கோட்டுப்புள்ளிகளென எனத் தரப்பட்டுள்ளது. மெனிலோசின் தேற்றத்தை தனித்தனியாக கீழ் வருவனவற்றிற்குப் பயன்படுத்தி

(a) $\Delta ZPP'$ உம் கோடு QQ' உம்.

(b) ΔZYP " " $Q'R'$ "

(c) ΔZPY " " QR "

$$\frac{PR}{RY}\cdot\frac{YR'}{R'P'}\cdot\frac{P'O}{OP} = -1$$ என நிறுவுக. இதிலிருந்து PP', QQ', RR' என்பன O வில் இடைவெட்டுகின்றன எனக் காட்டுக.

விடை :-



h_1, h_2, h_3 என்பன A, B, C இலிருந்து DEF இற்கு வரையப்பட்ட செங்குத்துகளாகும்.

எனவே இயல்பொத்த முக்கோணிகளிலிருந்து

$$\frac{AD}{DB} = \frac{h_1}{h_2}, \quad \frac{BE}{EC} = -\frac{h_2}{h_3}, \quad \frac{CF}{FA} = \frac{h_3}{h_1}$$

$$\therefore \frac{AD}{DB}\cdot\frac{BE}{EC}\cdot\frac{CF}{FA} = -1$$

<u>மறுதலை</u> D, E, F என்பன ΔABC இன் பக்கங்கள் AB, BC, CA என்பவற்றில் $\frac{AD}{DB} \cdot \frac{BE}{EC} \cdot \frac{CF}{FA} = -1$ ஆகுமாறு அமையும் புள்ளிகளாகும். எனவே D, E, F ஒரு நேர் கோட்டிலே புள்ளிகளாகும்.



(a) $\frac{XQ}{QZ} \cdot \frac{ZQ'}{Q'P'} \cdot \frac{P'O}{OP} = -1$

(b) $\frac{YR'}{R'P'} \cdot \frac{P'Q'}{Q'Z} \cdot \frac{ZX}{XY} = -1$

(c) $\frac{PR}{RY} \cdot \frac{YX}{XZ} \cdot \frac{ZQ}{QP} = -1$

பெருக்க

$$\frac{PR}{RY} \cdot \frac{YR'}{R'P'} \cdot \frac{P'O}{OP} = -1$$

மெனிலோசின் தேற்றத்தின் மறுதலைப்படி O, R, R' ஒரே நேர் கோட்டிலே புள்ளிகளாகும்.

∴ PP', QQ', RR' என்பன O இல் இடைவெட்டுகின்றன.

(2) ABCD என்னும் ஒரு நான்முகியின் BC, AD ஆகிய இரண்டிற்கும் சமாந்தரமான தளத்தினால் உண்டாகும் வெட்டு ஒரு இணைகரம் என நிறுவுக.

BC = a ஆகவும் AD = b ஆகவும் தளம் AC ஐ c : 1 − c என்னும் விகிதத்தில் பிரிப்பதாகவும் இருந்தால் இணைகரத்தின் பக்கங்களின் நீளங்களை a, b, c உறுப்புகளில் காண்க. BC, AD ஆகிய இரண்டிற்கும் சமாந்தரமான வெட்டுகள் அனைத்திலும் உயர் பரப்புடைய வெட்டு நான்முகியின் ஒவ்வொரு ஒரும் ஏனைய ஒருவிளிம்பின் இடைப்புள்ளியில் இருக்கின்றது எனவும் காட்டுக.

உயர் கல்விப் பதிப்பகம்.
36, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தூயகணிதம் II. க.பொ.த (உயர் தரம்) மாதிரி விடைகள். ஓகஸ்ட், 1990.

ஆறு வினாக்களுக்கு விடை தருக.

1. ABC ஒரு முக்கோணி. DEF என்பது ஒரு நேர்கோடு. முக்கோணியின் பக்கங்கள் AB, BC, CA என்பவற்றை முறையே D, E, F என்னும் புள்ளிகளில் இடைவெட்டுகின்றது.

$$\frac{AD}{DB}\cdot\frac{BE}{EC}\cdot\frac{CF}{FA}=-1$$ என்னும் மெனிலோசின் தேற்றத்தை நிறுவுக. மேற்கூறப்பட்ட தேற்றத்தின் மறுதலையையும் எழுதுக.

PQR, P'Q'R' என்பன இரு ஒருதளமான முக்கோணிகளாகும்.
QR, Q'R' என்னும் கோடுகள் X இற் சந்திக்கின்றன.
RP, R'P' " " Y " " .
PQ, P'Q' " " Z இல் இடைவெட்டுகின்றன
PP', QQ' " " O " " " .
X, Y, Z " புள்ளிகள் ஒரே கோட்டுப்புள்ளிகள் எனத் தரப்பட்டுள்ளது. மெனிலோசின் தேற்றத்தை தனித்தனியாக கீழ்வருவனவற்றிற்குப் பயன்படுத்தி
(a) $\Delta ZPP'$ உம் கோடு QQ' உம்.
(b) ΔZYP " " $Q'R'$ "
(c) ΔZFY " " QR "

$$\frac{PR}{RY}\cdot\frac{YR'}{R'P'}\cdot\frac{P'O}{OP}=-1$$ என நிறுவுக. இதிலிருந்து PP', QQ', RR' என்பன O வில் இடைவெட்டுகின்றன எனக் காட்டுக.

விடை :-



h_1, h_2, h_3 என்பன A, B, C இலிருந்து DEF இற்கு வரையப்பட்ட செங்குத்துகளாகும்.

எனவே இயல்பொத்த முக்கோணிகளிலிருந்து

$$\frac{AD}{DB}=\frac{h_1}{h_2}, \quad \frac{BE}{EC}=-\frac{h_2}{h_3}, \quad \frac{CF}{FA}=\frac{h_3}{h_1}$$

$$\therefore \frac{AD}{DB}\cdot\frac{BE}{EC}\cdot\frac{CF}{FA}=-1$$

<u>மறுதலை</u>: D, E, F என்பன ΔABC இன் பக்கங்கள் AB, BC, CA என்பவற்றில் $\frac{AD}{DB} \cdot \frac{BE}{EC} \cdot \frac{CF}{FA} = -1$ ஆகுமாறு அமையும் புள்ளிகளாகும் எனின் D, E, F ஒரு நேர் கோட்டுப் புள்ளிகளாகும்.



(a) $\frac{AQ}{QZ} \cdot \frac{ZQ'}{Q'P'} \cdot \frac{P'O}{OP} = -1$

(b) $\frac{yR'}{R'P'} \cdot \frac{P'Q'}{Q'Z} \cdot \frac{ZX}{Xy} = -1$

(c) $\frac{PR}{Ry} \cdot \frac{yX}{XZ} \cdot \frac{ZQ}{QP} = -1$

பெருக்க

$$\frac{PR}{Ry} \cdot \frac{yR'}{R'P'} \cdot \frac{P'O}{OP} = -1$$

மெனிலோசின் தேற்றத்தின் மறுதலைப்படி O, R, R' ஒரு நேர் கோட்டுப் புள்ளிகளாகும்.

∴ PP', QQ', RR' என்பன O இல் இடைவெட்டுகின்றன.

(2) $ABCD$ என்னும் ஒரு நான்முகியின் BC, AD ஆகிய இரண்டிற்கும் சமாந்தரமான தளத்தினால் உண்டாகும் வெட்டு ஒரு இணைகரம் என நிறுவுக.

$BC = a$ ஆகவும் $AD = b$ ஆகவும் தளம் AC ஐ $c : 1-c$ என்னும் விகிதத்தில் பிரிப்பதாகவும் இருந்தால் இணைகரத்தின் பக்கங்களின் நீளங்களை a, b, c உறுப்புகளில் காண்க. BC, AD ஆகிய இரண்டிற்கும் சமாந்தரமான வெட்டுகளுள் அதிகூடிய உயர்பரப்பைக் கொண்ட வெட்டு நான்முகியின் ஒவ்வொரு ஓரமும் ஏனைய ஓரங்களை இருகூறிடும் தளத்தில் இருக்கின்றது எனவும் காட்டுக.



EFGH என்னும் தளம் BC, AD என்பவற்றுக்குச் சமாந்தரமாகும்

(i) EF வழியே தளம் ABC ஐ. (iii) EH வழியே தளம் BAD ஐ

(ii) GH " " BCD " (iv) FG " " ACD ஐ.

வெட்டுகின்றது.

$BC \parallel EF$, $BC \parallel GH$

$\Rightarrow EF \parallel GH$

$|||^{ly}$ $FG \parallel EH$ $\quad \therefore$ EFGH ஓர் இணைகரம் $\frac{AF}{FC} = \frac{c}{1-c}$

$$\frac{EF}{BC} = \frac{AF}{AC} = \frac{c}{1} \quad \text{——} ①$$

$$\frac{FG}{AD} = \frac{CF}{CA} = \frac{1-c}{1} \quad \text{——} ②$$

① & ② $\Rightarrow EF = ac$, $FG = b(1-c)$

EFGH இன் பரப்பு $= EF \cdot FG \cdot \sin E\hat{F}G$

$= acb(1-c)\sin\theta$, இங்கு $\theta = E\hat{F}G$

$= ab\sin\theta\left\{-(c-\tfrac{1}{2})^2 + \tfrac{1}{4}\right\}$

உயர்பரப்பு $= \dfrac{ab\sin\theta}{4}$ இது $c = \tfrac{1}{2}$ ஆகும் போது பெறப்படும்

அதாவது AB, BC, CD என்பவற்றையும் EFGH தளம் இருகூறிடும்

③ $y = m_1x + c_1$, $y = m_2x + c_2$; $x = 0$ என்னும் சமன்பாடு களைக் கொண்ட மூன்று கோடுகளால் உருவாகும் முக்கோணியின் பரப்பு

$$\frac{(c_1 - c_2)^2}{2|m_1 - m_2|}$$ ஆகுமெனக் காட்டுக

இதிலிருந்து $y = 2x+3$, $y = -2x+7$, $y = 6x+2$ என்னும் கோடுகளால் உருவாகும் முக்கோணியின் பரப்பைக் காண்க

விடை -



$$y = m_1 x + c_1$$
$$y = m_2 x + c_2$$
$$c_2 - c_1 = (m_1 - m_2)x$$
$$x = \frac{c_2 c_1}{m_1 - m_2}$$

$$\Delta ABC = \tfrac{1}{2}(c_2 - c_1)\cdot AD$$
$= \tfrac{1}{2}(c_2 - c_1)$ A இன் x ஆள்கூறு
$$= \tfrac{1}{2}(c_2 - c_1)\cdot\frac{(c_2 - c_1)}{m_1 - m_2}$$
$$= -\tfrac{1}{2}\frac{(c_1 - c_2)^2}{(m_1 - m_2)}$$

∴ பரப்பளவு $\Delta ABC = \tfrac{1}{2}\dfrac{(c_1 - c_2)^2}{|m_1 - m_2|}$



$$\Delta ABC = \Delta DBE + \Delta AEF - \Delta CDF$$
$$= \frac{(7-3)^2}{2|-2-2|} + \frac{(2-3)^2}{2|6-2|} - \frac{(7-2)^2}{2(-2-6)}$$
$$= 16/8 + 1/8 - \frac{25}{16}$$
$$= \underline{\underline{9/16}}$$

4

(4) $S \equiv x^2 + y^2 - 2x - 6y + 1 = 0$

$S' \equiv 3x^2 + y^2 - 21x + 2y + 35 = 0$ என்னும் வட்டங்கள் ஒன்றுக்கொன்று முற்றிலும் வெளிப்புறமாக இருக்கின்றன என நிறுவுக.

S இலிருந்து அதிதூரத்தில் S' இலுள்ள புள்ளி P இன் ஆள்கூறுகளைக் காண்க.

P யிலிருந்து S இற்கான தொடலிகளில் ஒன்றின் சமன்பாடு $x = 4$ எனக் காட்டி, மற்றையதின் சமன்பாட்டைப் பெறுக.



$S \equiv x^2 + y^2 - 2x - 6y + 1 = 0$, மையம் $C_1 \equiv (1, 3)$

ஆரை $r_1 = 3$

$S' \equiv 3x^2 + 3y^2 - 21x + 2y - 35 = 0$, மையம் $C_2 = (7/2, -1/3)$

ஆரை $r_2 = 5/6$

$C_1C_2 = 25/6 \quad \therefore r_1 + r_2 = 3\frac{5}{6}$

$\therefore C_1C_2 > (r_1 + r_2)$ ∴ ஒன்றுக்கொன்று முற்றிலும் வெளியே அமையும்

$C_1C_2 = \frac{25}{6}$, $C_2P = r_2 = 5/6$, $\frac{C_1C_2}{C_2P} = \frac{5}{1}$

அதனுடன் C_2, C_1 இற்கும் P இற்கும் இடையில் அமையும் ∴ $P \equiv (\alpha, \beta)$ எனின்

$$\frac{5\alpha + 1}{6} = 7/2 \Rightarrow \alpha = 4$$

$$P \equiv (4, -1)$$

$$\frac{5\beta + 3}{6} = -1/3 \Rightarrow \beta = -1$$

$C_1 \equiv (1, 3)$, $r_1 = 3$

∴ $x = 4$ என்னும் கோடு S இற்கு ஒரு தொடலி அதனுடன் இக்கோடு P இனூடாகச் செல்லும்.

(iv) $x=4$, $S=0$ இரண்டு தொடலியாகும்
P யூடாக

$$m_{C_1P} = \frac{3+1}{1-4} = \frac{-4}{3} = \tan(\pi/2+\alpha)$$

$\therefore \tan\alpha = 3/4$

$\therefore$ மற்றையதின் சாய்வு

$$= \tan(\pi/2 + 2\alpha)$$
$$= -7/24$$

$\therefore$ மற்றைய சமன்பாடு

$$24y + 7x = 4$$



(5)

(i) வளையி C_1 ஆனது $r = 2a\cos\theta$, $(-\frac{\pi}{2} \le \theta \le \frac{\pi}{2})$ என்னும் முனைவுச் சமன்பாட்டினால் தரப்பட்டுள்ளது. C_1 என்பது உற்பத்தியூடாகச் செல்லும் ஒரு வட்டம் எனக் காட்டுக.
இன்னொரு வளையி C_2, $r = \frac{3a}{2}\sec\theta$, $(-\frac{\pi}{2} < \theta < \frac{\pi}{2})$ இனால் தரப்படுகின்றது. C_2 ஒரு நேர்கோடு எனக் காட்டுக.
C_1, C_2 ஆகியவற்றிற்கு பொதுவாக உள்ள புள்ளிகளின் முனைவு ஆள்கூறுகளையும் காண்க.

(ii) (a) $x^2+y^2-5=0$ (b) $y^2-4x=0$ (c) $y+x-1=0$
என்னும் வளையிகளை ஒரு வரிப்படத்தில் வரைக.

$x-y$ தளத்திலுள்ள பிரதேசம் R இலுள்ள புள்ளிகளின் ஆள்கூறுகள், $x^2+y^2 \le 5$, $y^2 \le 4x$, $y+x \le 1$ என்பவற்றை திருப்தி செய்கின்றன. பிரதேசம் R ஐ வரைந்து நிழற்றுக.
இதில் மூன்று வளையிகளும் ஒன்றை ஒன்று இடைவெட்டும் புள்ளிகளையும் காட்டுக.
R இலுள்ள $|y-2x|$ இன் மிகக் கூடிய பெறுமானத்தையும் காண்க.

விடை :-



O என்பது முனைவுப்புள்ளியாகவும் l என்பது ஆரம்பக் கோடாகவும் கருதுக எனக

$A \equiv (2a, 0) \implies r = 2a\cos\theta$ என்பதால்

$P \equiv (r, \theta)$ $\quad O\hat{P}A = \pi/2$ ஆகும்

$\therefore$ P இன் ஒழுக்கு OA ஐ விட்டமாகக் கொண்ட வட்டமாகும்



$r = \frac{3a}{2}\sec\theta$

$r\cos\theta = 3a/2$

P இன் ஒழுக்கு உற்பத்தி O இலிருந்து $3a/2$ தூரத்தில் உள்ள நேர்கோடாகும்.

C_1, C_2 என்பவற்றிற்கான பொதுவான புள்ளிகள்

$$\left.\begin{array}{l} r = 2a\cos\theta \\ r = 3a/2\,\sec\theta \end{array}\right\} \implies \theta = \pm\frac{\pi}{6} \quad \left(-\frac{\pi}{2} < \theta < \pi/2\right)$$

$\therefore$ இடைவெட்டும் புள்ளி $(a\sqrt{3}, \pm\pi/6)$

(ii)



$A \equiv (1, -2)$, $A' \equiv (1, 2)$

$B \equiv (2, -1)$, $B' \equiv (-1, 2)$

$C \equiv (3-2\sqrt{2}, -2+2\sqrt{2})$, $C' \equiv (3+2\sqrt{2}, -2-2\sqrt{2})$

$y - 2x = \lambda$ என்னும் நேர்கோட்டுக் குடும்பத்தைக் கருதுக. இது வட்டத்தைத் தொடும்போது $|\lambda|$ உயர்வாகும்.

$2x - y + \lambda = 0$ $\qquad \lambda = \pm 5$

$\frac{|\lambda|}{\sqrt{5}} = \sqrt{5}$ $\qquad \therefore |y - 2x| = |\lambda| = 5$

$|y - 2x|$ உயர்வு $= 5$

(6) பரவளைவு $y^2 = 4ax$ க்கு புள்ளி $(at^2, 2at)$ இலுள்ள தொடலியின் சமன்பாட்டைக் காண்க.
இப் பரவளைவிற்கு புள்ளி P யிலுள்ள தொடலி, அதன் செலுத்தியை Q வில் இடைவெட்டுகின்றது. பரவளைவின் குவியம் S ஐ தனது மையமாகவும் SQ ஐ தனது ஆரையாகவும் கொண்ட வட்டம் மீண்டும் தொடலியை T இல் வெட்டுகின்றது. T இலிருந்து SP க்கு வரையப்பட்ட செங்குத்தின் அடி M ஆகும். SM ஆனது செவ்வகலத்தின் அரைவாசி எனக் காட்டுக.

விடை:-
$$\frac{dy}{dx} = \frac{dy/dt}{dx/dt} = \frac{2a}{2at} = 1/t$$

$\therefore$ தொடலியின் சமன்பாடு
$$y - 2at = 1/t\,(x - at^2)$$
$$x - yt + at^2 = 0$$



$Q \equiv (-a, a/t\,(t^2-1))$

$T \equiv \left\{\lambda, \frac{\lambda + at^2}{t}\right)$ λ – தீர்மானிக்க வேண்டியது.

$SQ = ST$

$4a^2 + a^2/t^2\,(t^2-1)^2 = \left(\frac{\lambda + at^2}{t}\right) + (\lambda - a)^2$

$\Longrightarrow \lambda \pm a$

$\therefore T \equiv (a, a/t\,(1+t^2))$

$\therefore ST \perp x$ அச்சு

(ie) $R\hat{S}T = \pi/2$

அத்துடன் $M_{SP} \times M_{SQ} = -1$

(ie) $Q\hat{S}P = \pi/2$

$\therefore \Delta SGN \equiv \Delta STM$

$\Rightarrow SM = SN = 2a =$ அரைச் செவ்வகலம்.

(7) $y = mx + c$ என்னும் கோடு $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்னும் நீள்வளையத்தை $P_1(x_1, y_1)$, $P_2(x_2, y_2)$ என்னும் புள்ளிகளில் இடைவெட்டுகின்றது.

$$\frac{y_1 + y_2}{x_1 + x_2} = \frac{-b^2}{ma^2}$$ ஆகுமெனக் காட்டுக.

இதிலிருந்து, $y = mx$ என்னும் கோட்டிற்குச் சமாந்தரமான நாண்களின் நடுப்புள்ளியின் ஒழுக்கு $y = m'x$ என்னும் கோடு என உய்த்தறிக.

இங்கு $mm' = -\frac{b^2}{a^2}$ ஆகும்.

நீள்வளையத்திற்கு P_1, P_2 இலுள்ள தொடலிகள் $y = m'x$ இல் சந்திக்கும் எனக் காட்டுக. நீள்வளையத்திற்கு A, A' என்பன உச்சிகளாகவும் C என்பது மையமாகவும் உள்ளன. Q என்பது நீள்வளையத்தின் மீதுள்ள வேறொரு புள்ளியாகும். A யிலும் Q இலும் உள்ள தொடலிகள் R இல் சந்திக்கின்றன. CR ஆனது $A'Q$ இற்குச் சமாந்தரம் எனக் காட்டுக.

விடை:-

x_1, x_2 என்பன

$\frac{x^2}{a^2} + (mx + c)^2/b^2 = 1$ என்பதன் மூலங்கள்

$$\left(\frac{1}{a^2} + \frac{m^2}{b^2}\right)x^2 + \frac{2mc}{b^2}x + \frac{c^2}{b^2} - 1 = 0$$

$$x_1 + x_2 = \frac{-2mc}{b^2} \Big/ \left(\frac{1}{a^2} + \frac{m^2}{b^2}\right)$$

$$y_1 + y_2 = m(x_1 + x_2) + 2c$$

$$\frac{y_1 + y_2}{x_1 + x_2} = m - \frac{b^2}{m}\left(\frac{1}{a^2} + \frac{m^2}{b^2}\right) = \frac{-b^2}{ma^2}$$

$y = mx$ இற்குச் சமாந்தரக் கோடு $y = mx + c$ ஆகுக. அக்கோட்டின் நடுப்புள்ளி (X, Y) எனின்

$$X = \frac{x_1 + x_2}{2}, \quad Y = \frac{y_1 + y_2}{2}$$

$$\frac{Y}{X} = \frac{y_1 + y_2}{x_1 + x_2} = \frac{-b^2}{ma^2} = \text{மாறிலி } (m')$$

$\therefore (X, Y)$ இன் ஒழுக்கு $y = m'x$ ஆகும்.

$\therefore mm' = -b^2/a^2$

$P_1(x_1, y_1)$, $P_2(x_2, y_2)$ இலுள்ள தொடலிகள்

$\frac{xx_1}{a^2} + \frac{yy_1}{b^2} = 1$, $\frac{xx_2}{a^2} + \frac{yy_2}{b^2} = 1$ இவை இடைவெட்டும் புள்ளி

(x', y') எனின் $x'/_{a^2}(x_1 - x_2) + y'/_{b^2}(y_1 - y_2) = 0$

$$m_{P_1P_2} = \frac{y_1 - y_2}{x_1 - x_2} = m$$

P_1P_2 இன் சமன்பாடு $y = mx + c$

$\therefore \; x'/_{a^2} + y'/_{b^2}\, m = 0$

$\therefore (x', y')$ என்பது $x/_{a^2} + y/_{b^2}\, m = 0$ இல் அமையும்.

(ie) $y = -b^2/_{ma^2}\, x$

$\Longrightarrow$ $y = m'x$ என்பது (x', y') என்பதைக் கொண்டு செல்லும்



$m_{CR} = \frac{\mu/2 - 0}{\frac{\lambda - a}{2} - 0} = \mu/_{\lambda - a}$

$\Longrightarrow A'Q \,//\, CR$

$m_{A'Q} = \frac{\mu - 0}{\lambda - a} = \mu/_{\lambda - a}$

(8) P, P' என்பன செவ்வகப் அதிபரவளைவு $xy = c^2$ இலுள்ள இரண்டு புள்ளிகளாகும். நாண் PP' இன் சமன்பாட்டை காண்க. இவ்வழியே, அதிபரவளைவிற்கு புள்ளி P யிலுள்ள தொடலியின் சமன்பாட்டை உய்த்தறிக.

(i) உற்பத்தி O வினூடு P யிலுள்ள தொடலிக்கு வரையப்படும் செங்குத்து, அதிபரவளைவை Q, R என்னும் புள்ளிகளில் சந்திக்கின்றது. PQ, PR என்பன x அச்சை முறையே S, T எனும் புள்ளிகளில் சந்திக்கின்றன. ST இன் நடுப்புள்ளி, P யிலிருந்து x அச்சுக்கு வரையப் செங்குத்தின் அடியென நிறுவுக.

(ii) P யிலுள்ள தொடலி, $x - y = 0$, $x + y = 0$ என்னும் கோடுகளை முறையே A, B களில் சந்திக்கிறது. அதே வளைவுக்கு P யிலுள்ள செவ்வன் x அச்சை, y அச்சுக்களை முறையே C, D களில் சந்திக்கின்றது. $\Delta^2 \Delta_1 = 8c^6$ என நிறுவுக. இங்கு Δ என்பது முக்கோணம் OAB இனது பரப்பையும், Δ_1 என்பது முக்கோணம் OCD இனது பரப்பையும் குறிக்கின்றன.

விடை

(i)



$P \equiv (ct, c/t)$,
$P' \equiv (ct', c/t')$

$$PP' \Rightarrow y - c/t = (x - ct)\left(\frac{c/t - c/t'}{ct - ct'}\right)$$

$$\Rightarrow tt'y + x = c(t + t_1)$$

$$t' \longrightarrow t \Rightarrow t^2 y + x = 2ct.$$

இஃது P இல் தொடலியாகும். O இனூடாக செங்குத்துக் கோடு $y = t^2 x$

$\therefore Q \equiv (c/t, ct)$, $R \equiv (-c/t, -ct)$

PQ இன் சமன்பாடு $y + x = c(t + 1/t)$

$\therefore S \equiv [ct + c/t, 0]$

$T \equiv (ct - c/t, 0)$

ST இன் நடுப்புள்ளி $\equiv (ct, 0)$

$\therefore$ P இலிருந்து x அச்சிற்கு வரையப்படும் செங்குத்தின் அடி ST இன் நடுப்புள்ளியாகும்

(ii) $\left.\begin{aligned} t^2 y + x &= 2ct \\ x - y &= 0 \end{aligned}\right\}$ $\quad A \equiv \left\{\frac{2ct}{1+t^2}, \frac{2ct}{1+t^2}\right\}$

$$\left.\begin{aligned} t^2 y + x &= 2ct \\ x + y &= 0 \end{aligned}\right\} \qquad A \equiv \left(\frac{2ct}{1-t^2}, \frac{-2ct}{1+t^2} \right)$$

$$\therefore \Delta \ \tfrac{1}{2}\left| \left(\frac{2ct}{1+t^2}\right)\left(\frac{-2ct}{1-t^2}\right) - \left(\frac{2ct}{1+t^2}\right)\left(\frac{2ct}{1-t^2}\right) \right|$$

$$= \left| \frac{4c^2t^2}{1-t^4} \right|$$

$$\Delta^2 = \frac{16c^4t^4}{(1-t^4)^2}$$

F இல் செவன் $y - c/t = t^2(x - ct)$

$$\therefore C \equiv (ct - c/t^3, 0)$$

$$D \equiv (0, c/t - ct^3)$$

$$\Delta_1 = \tfrac{1}{2}\left|(ct - c/t^3)(c/t - ct^3)\right| = \tfrac{1}{2}c^2\frac{(1+t^4)^2}{t^4}$$

$$\Delta^2 \Delta_1 = 8c^6$$

(9) கீழ்வரும் சமன்பாடுகள் தீர்க்க.

(i) $\sin\theta - \cos\theta = 1/\sqrt{2}$

(ii) $\cos^{-1}x - \sin^{-1}x = \pi/6$

(iii) $\sin x \cos x - 6\sin x + 6\cos x + 6 = 0$

விடை:-

(i) $\sin\theta - \cos\theta = 1/\sqrt{2}$

$$\Rightarrow \frac{1}{\sqrt{2}}\sin\theta - \frac{1}{\sqrt{2}}\cos\theta = \frac{1}{2}$$

$$\Rightarrow \sin(\theta - \pi/4) = \sin \pi/6$$

$$\theta - \pi/4 = n\pi + (-1)^n \pi/6, \quad n = 0 \pm 1 \pm 2 \dots$$

$$\theta = (n\pi + \pi/4) + (-1)^n \pi/6, \quad n = 0 \pm 1 \pm 2 \dots$$

(ii) $\cos^{-1}x - \sin^{-1}x = \pi/6$

$$\left.\begin{aligned} \alpha &= \cos^{-1}x \\ \beta &= \sin^{-1}x \end{aligned}\right\} \text{எனின்} \Rightarrow \beta = \pi/2 - \alpha$$

$$\therefore \alpha - \beta = \pi/6, \quad \alpha + \beta = \pi/2$$

$$\Rightarrow 2\alpha = 2\pi/3$$

$$\therefore \alpha = \pi/3$$

$$\therefore x = 1/2$$

(iii) $\sin x \cos x + 6 = 6(\sin x - \cos x)$

வர்க்கிக்க

$\Longrightarrow \sin^2 x \cos^2 x + 12 \sin x \cos x + 36 = 36(1 - 2\sin x \cos x)$

$\Longrightarrow \sin x \cos x(\sin x \cos x + 84) = 0$

$\Longrightarrow \sin x \cos x = 0$

$\sin x = 0$ OR $\cos x = 0$

$x = m\pi$ OR $x = (2n\pi + \pi/2)$

m, n என்பன நேர்நிறை எண்கள்.

(10)

முக்கோணி ABC யின் பக்கங்கள் a, b, c ம் அரைச் சுற்றளவு s ம் குத்துயரங்கள் h_1, h_2, h_3 ம் உள்ள வட்டத்தின் ஆரை p ம் கீழ்வருவனவற்றை நிறுவுக:

(i) $1/h_1 + 1/h_2 + 1/h_3 = 1/p$

(ii) கோணங்கள் A, B, C என்பன 1 : 2 : 4 என்னும் விகிதத்தில் இருந்தால் $1/a = 1/b + 1/c$

(iii) $2(PA + PB + PC)^2 = a^2 + b^2 + c^2 + \sqrt{48s(s-a)(s-b)(s-c)}$

இங்கு P என்பது, அதில் (P இல்) முக்கோணத்தின் பக்கங்கள் எதிர் அமைக்கின்ற முக்கோணத்துள் உள்ள ஒரு புள்ளியாகும்.

விடை:-

(i)



$\Delta ABC = \Delta BIC + \Delta CIA + \Delta AIB$

$\Delta ABC = \frac{1}{2}h_1 a = \frac{1}{2}h_2 b = \frac{1}{2}h_3 c$

$\Delta BI = \frac{1}{2}pa$, $\Delta CIA = \frac{1}{2}pb$,

$\Delta AIB = \frac{1}{2}pc$

$$1 = \frac{\Delta BIC}{\Delta ABC} + \frac{\Delta CIB}{\Delta ABC} + \frac{\Delta AIB}{\Delta ABC}$$

$$\therefore \frac{p}{h_1} + \frac{p}{h_2} + \frac{p}{h_3} = 1 \Longrightarrow 1/h_1 + 1/h_2 + 1/h_3 = 1/p$$

(ii) $A = \pi/7$, $B = \frac{2\pi}{7}$, $C = \frac{4\pi}{7}$

$\frac{\sin A}{a} = \frac{\sin B}{b} = \frac{\sin C}{c} = \lambda$ என்க.

$$\frac{1}{b}+\frac{1}{c}=\lambda\left(\frac{1}{\sin 4\pi/7}+\frac{1}{\sin 2\pi/7}\right)$$

$$=\lambda\,\frac{2\sin 3\pi/7\,\cos \pi/7}{2\sin 4\pi/7\,\sin \pi/7\,\cos\pi/7}$$

$$=\lambda\,\frac{1}{\sin\pi/7}\cdot\frac{\sin 3\pi/7}{\sin 4\pi/7}$$

$$=\frac{\lambda}{\sin A}$$

$$=1/a$$

$$\Rightarrow (\text{ie}) = 1/b + 1/c = 1/a$$

(iii)



$$A\hat{P}C = C\hat{P}B = B\hat{P}A = 2\pi/3$$

$$\Delta ABC = \Delta APB + \Delta PBC + \Delta CPA$$

$$= 1/2\,(AP\cdot PB + PB\cdot PC + PC\cdot PA)\sin 2\pi/3$$

$$= \frac{\sqrt{3}}{4}(AP\cdot BP + BP\cdot CP + CP\,AP) \text{ --- (A)}$$

அதேபோல் $a^2 = BP^2 + CP^2 - 2BP\cdot CP\cdot\cos 2\pi/3$

$$= BP^2 + CP^2 + BP\cdot CP$$

$$a^2+b^2+c^2 = 2(AP^2+BP^2+CP^2) + BP\cdot CP + CP\cdot AP + AP\cdot BP$$

$$= 2(AP+BP+CP)^2 - 3(AP\cdot BP + BP\cdot CP + CP\cdot AP) \text{ --- (B)}$$

$$48s(s-a)(s-b)(s-c) = 3\cdot 2s(2s-2a)(2s-2b)(2s-2c)$$

$$= 3(a+b+c)(b+c-a)(c+a-b)(a+b-c)$$

$$= 3\times 2bc(1+\cos A)\,2bc(1-\cos A)$$

$$= 3\times(2bc)^2\sin^2 A = 48\Delta^2 \text{ --- (C)}$$

(A) & (B) & (C)

$$\Rightarrow 2(AP+BP+CP)^2 = a^2+b^2+c^2+\sqrt{48s(s-a)(s-b)(s-c)}$$

//

(11) ஒரு பாடசாலை A யிலுள்ள 5 மாணவர்களுக்கு ஒரு பரீட்சை பேப்பர் கொடுக்கப்பட்டது. அவர்களால் பெறப்பட்ட புள்ளிகள் 44, 39, 53, 24, 30 ஆகப் பதியப்பட்டது.

அதே பரீட்சைப் பேப்பர் இன்னொரு பாடசாலை B இலுள்ள 10 மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டு, அவர்களால் பெறப்பட்ட புள்ளிகள் 50, 43, 42, 49, 49, 52, 27, 33, 42, 23 ஆகப் பதியப்பட்டது.

(i) (a) பாடசாலை A (b) பாடசாலை B இலுள்ள மாணவர்களால் பெறப்பட்ட புள்ளிகளின் இடை மாற்றத்திறன் ஆகியவற்றை காண்க.

(ii) இந்தப் பரீட்சைப் பேப்பருக்கு மாணவர்களால் பெறப்பட்ட புள்ளிகளின் இடை, மாறற்றிறன் ஆகியவற்றைக் காண்க.

(a) மூன்று இடைகளுக்கு.

(b) மூன்று மாறற்றிறன்களுக்கு, இடையிலான தொடர்பை கூறுக.

[இந்தக் கேள்வியின் பகுதிக்குரிய எல்லா கணிப்புகளும் காட்டப்பட வேண்டும்]

விடை:-

(i) (a) School A

$$x = 44, 39, 53, 24, 30$$

$$\sum x = 190$$

$$\mu_1 = \frac{190}{5} = 38$$

$$x - \mu_1 = 6, 1, 15, -14, -8$$

$$(x-\mu_1)^2 = 36, 1, 225, 196, 64$$

$$\sum (x-\mu_1)^2 = 522$$

$$\sigma_1^2 = \frac{1}{n}\sum (x-\mu)^2 = \frac{522}{5} = 104.4$$

(b) School B

$$x = 50, 43, 42, 49.52, 27, 36, 42, 23$$

$$\sum x = 410$$

$$\mu_2 = \frac{410}{10} = 41$$

$$x - \mu_2 = 9, 2, 1, 8, 8, 11, -14, -8, 1, -18$$

$$(x-\mu_2)^2 = 81, 4, 1, 64, 121, 196, 64, 1, 324$$

$$\sum (x-\mu_2)^2 = 920 \quad \therefore \sigma_2^2 = 92$$

(ii) A, B இலிருந்து

$$\sum x = 190 + 410 = 600, \quad \mu_3 = \frac{600}{15} = 40$$

$$\therefore x - \mu_3 = 4, -1, 13, -16, -10, 10, 3, 2, 9, 9, 12, -13, -7, 2, -17$$

$$(x-\mu_3)^2 = 16, 1, 169, 256, 100, 100, 9, 4, 81, 81, 144, 169, 49, 4, 289$$

$$\sum (x-\mu_3)^2 = 1472$$

$$\sigma_3^2 = \frac{1472}{15} = 98.13$$

(a) $$\mu_3 = \frac{n_1\mu_1 + n_2\mu_2}{n_1 + n_2}$$

(b) $$\sigma_3^2 = \frac{n_1\sigma_1^2 + n_2\sigma_2^2}{n_1 + n_2} + \frac{n_1(\mu_3-\mu_1)^2 + n_2(\mu_3-\mu_2)^2}{n_1+n_2}$$

//

(12)

(a) மூன்று சாதாரண (கோடாத) காசுகள் ஒன்றாக எறியப்படுகின்றன. நிகழ்ச்சிகள் A, B, C பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றன.

A = { மூன்று காசும் மேலே தலைகளுடன் விழுவது }

B = { சரியாக இரண்டு தலைகள் நிகழ்வது }

C = { இரண்டு தலைகளுக்குக் குறைபடாது பெறுவது நிகழ்வது }

X என்னும் நிகழ்ச்சியின் நிகழ்தகவு P(X) எனக் குறிக்கப்பட்டால்

(i) P(A) (ii) P(B) (iii) P(C) (iv) P(A∪B)

ஆகியவற்றைக் காண்க.

(b) 1 இலிருந்து 12 வரையுள்ள முழுவெண்கள் ஒவ்வொன்றும் தனித்தனி மட்டைகளில் எழுதப்பட்டுள்ளன. இரண்டு மட்டைகள் எழுமாறாகத் தெரிந்தெடுக்கப்படுகின்றன. இவற்றிலுள்ள முழுவெண்களின் கூட்டல் 12 பெறப்படுவதற்கான நிகழ்தகவைக் காண்க.

விடை:

(a) 3 நாணயங்கள் சுண்டப்படும் போது மாதிரி வெளி

$U = \{HHH, HHT, HTH, HTT, TTT, TTH, THT, THH\}$

$\therefore A = \{HHH, HHT, HTH, HTT\}$

(i) $p(A) = 4/8 = 1/2$

(ii) $p(B) = 3/8$

(iii) $p(C) = 7/8$

(iv) $P(A \cup B) = 5/8$

(b) 12 கூட்டுத்தொகை அமைவதற்கான மாதிரி வெளி

(1, 11) (2, 10) (3, 9) (4, 8) (5, 7)

(11, 1) (10, 2) (9, 3) (8, 4) (7, 5)

∴ தேவையான நிகழ்தகவு

$$= \left(\frac{1}{16} \times \frac{1}{15}\right) \times 10$$

$$= \frac{1}{24}$$

பதிப்பகத்துக்குரியது

ஊர் கல்விப் பதிப்பகம்

36, சுவாமியார் வீதி கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

தூய கணிதம் 1, க.பொ.த (உயர்தரம்), மாதிரி விடைகள், ஓகஸ்ட், 1989.

(ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.)

1 (i) $\frac{1}{2} + \frac{1\cdot 4}{2\cdot 5} + \frac{1\cdot 4\cdot 7}{2\cdot 5\cdot 8} + \frac{1\cdot 4\cdot 7\cdot 10}{2\cdot 5\cdot 8\cdot 11} + \cdots$ என்ற தொடரின் r ஆவது உறுப்பு U_r ஆகும். U_{r+1} ஐ U_r இன் சார்பில் எடுத்துரைக்க?

$f(r) - f(r-1) = U_r$ ஆகவும், $F(r) = (Ar + B)U_{r+1}$ ஆகவும் இருக்கத்தக்கதாக $f(r)$ என்பது r இன் ஒரு சார்பாகும். இங்கு A, B ஆகியன மாறிலிகள்.

A, B ஆகியவற்றின் பெறுமானங்களைக் கண்டு, இதிலிருந்து

$$\sum_{r=1}^{n} U_r = \frac{1}{2}\left\{\frac{4\cdot 7\cdot 10 \cdots (3n+1)}{2\cdot 5\cdot 8 \cdots (3n-1)} - 1\right\}$$ எனக் காட்டுக?

(ii) எல்லா நேர் நிறையெண் n இற்கும் $3\cdot 5^{2n+1} + 2^{3n+1}$ ஆனது 17 இனால் வகுபடுந் தகைமையைக் கணிதத் தொகுத்தறிவினால் நிறுவுக. அதோடு, இப்பேறு சாராத முறையினாலும் நிறுவுக.

(i) விடை

$$U_r = \frac{1\cdot 4\cdot 7\cdot 10 \cdots (3r-2)}{2\cdot 5\cdot 11 \cdots (3r-1)}$$ ஆகும்.

$$U_{r+1} = \frac{1\cdot 4\cdot 7\cdot 10 \cdots (3r-2)(3r+1)}{2\cdot 5\cdot 11 \cdots (3r-1)(3r+2)}$$ ஆகும்.

$$\therefore U_{r+1} = \left(\frac{3r+1}{3r+2}\right)U_r$$ ஆகும்.

$$f(r) - f(r-1) = (Ar+B)U_r - \{A(r-1)+B\}U_r = U_r$$

$$\Rightarrow (Ar+B)(3r+1) \equiv (Ar+B-A+1)(3r-2)$$

$r = -\frac{1}{3}$ எனின் $4A + 3B = -3$

$r = \frac{2}{3}$ எனின் $-2A + 3B = 0$

$\therefore A = \frac{2}{3}, \quad B = 1$

$f(r) = \frac{1}{2}(3r+2)U_{r+1}$

$U_1 = f(1) - f(0)$

$U_2 = f(2) - f(1)$

$\cdots\cdots\cdots$

$U_{n-1} = f(n-1) - f(n-2)$

$U_n = f(n) - f(n-1)$

$$\sum_{r=1}^{n} U_r = F(n) - f(0)$$

$$= \frac{1}{2}(3n+2)U_{n+1} - U_r$$

$$= \frac{1}{2}\left\{\frac{1\cdot 4\cdot 7 \cdots (3n+1)}{2\cdot 5\cdot 8 \cdots (3n-1)}\right.$$

(ii) $f(n) = 3\cdot 5^{2n+1} + 2^{3n+1}$

$f(1) = 17$

$\Rightarrow n = 1$ இற்கு முடிவு உண்மையாகும்

$n = p$ " " உண்மை எனக.

அ.து $f(p)$ ஆனது 17 ஆல் பிரிபடும்

$\Rightarrow f(p+1) = 3\cdot 5^{2p+3} + 2^{3p+4}$

$f(p+1) = 8[3\cdot 5^{2p+1} + 2^{3p+1}] + 3\cdot 5^{2p+1}\cdot 17$

$f(p+1) = 8f(p) + 17\cdot 35^{2p+1}$

$\Rightarrow f(p+1)$ ஆனது 17 ஆல் பிரிபடும் எண் எனின் $f(p)$ ஆனது 17 ஆல் பிரிபடும்.

$\therefore n = p+1$ முடிவு உண்மையாகும்.

n-இன் எல்லா நேர்முழுவெண் பெறுமானங்களுக்கும் $f(n)$ ஆனது 17 ஆல் பிரிபடும்.

<u>மாற்றுமுறை</u>

$$3\cdot 5^{2n+1} + 2^{3n+1} = 15\cdot 25^n - 2\cdot 8^n$$
$$= 15(25^n - 8^n) + 17\cdot 8^n$$
$$= 15(25-8)(25^{n-1} + 25^{n-2}\cdot 8 + \cdots 8^{n-1}] + 17\cdot 8^n$$
$$= 15\cdot 17[25^{n-1} + 25^{n-2} \ldots 8^{n-1}] + 17\cdot 8^n$$

$\therefore 3\cdot 5^{2n+1} + 2^{3n+1}$ ஆனது 17 ஆல் பிரிபடும்.

(2) இரு நேர் எண்களின் கூட்டலிடையானது அவ்வெண்களின் பெருக்கலிடையிலும் பெரியது OR பெருக்கலிடைக்கு சமன் எனக் காட்டுக.

இதிலிருந்து OR வேறுவிதமாக ; $n > r \geq 0$ எனின்

$\frac{n+1}{2} \geq \sqrt{(n-r)(r+1)}$ என நிறுவுக

யாதாயினும் ஒரு நிறைவெண் $n \geq 1$ இற்கு

$(n+1)^n \geq 2^n n!$ என்பதை உய்த்தறிக.

(ii) $acx^2 - b(c+a)x + (c+a)^2 = 0$ என்னும் சமன்பாட்டின் மூலங்களை $ax^2 + bx + c = 0$ என்னும் சமன்பாட்டின் α, β என்னும் மூலங்களின் சார்பில் எடுத்துரைக்க. இங்கு a, b, c ஆகியன மாறிலிகள்.

(iii) $\dfrac{x^2 + 9x - 20}{x^2 - 11x + 30} \geq 1$ என்னும் சமனிலி உண்மையாக இருக்கும் x இனுடைய பெறுமானங்களின் வீச்சைக் காண்க.

விடை (2)

(i) $(\sqrt{a}-\sqrt{b})^2 \geq 0$

$a - 2\sqrt{ab}+b \geq 0$

$\frac{a+b}{2} \geq \sqrt{ab}$

$a = n-r;\quad b = r+1$

$\frac{(n-r)(r+1)}{2} \geq \sqrt{(n-r)(r-1)}$

$\frac{n+1}{2} \geq \sqrt{(n-r)(r+1)}$

$r=0 \Rightarrow \frac{n+1}{2} \geq \sqrt{(n-1)}$

$r=2 \Rightarrow \left(\frac{n+1}{2}\right) \geq \sqrt{(n-1)\cdot 2}$

- - - - - - - - - - - - - - - - - -

$r = n-2 \Rightarrow \left(\frac{n+1}{2}\right) \geq \sqrt{2(n-1)}$

$r = n-1 \Rightarrow \left(\frac{n+1}{2}\right) \geq \sqrt{1\cdot n}$

$\Rightarrow$ பெருக்க $\left(\frac{n+1}{2}\right)^n \geq 2^n n!$

(ii) $\alpha+\beta = -\frac{b}{a}$; $\alpha\beta = c/a$ (தரவின்படி)

$cax^2 - b(c+a)x + (c+a)^2 = 0$

a^2 ஆல் பிரிக்க $c/a\, x^2 - b/a(c/a+1) + (c/a+1)^2 = 0$

$\alpha\beta x^2 + (\alpha+\beta)(\alpha\beta+1)x + (\alpha\beta+1)^2 = 0$

$\alpha\beta\left\{x^2 + (\alpha + 1/\beta + \beta + 1/\alpha)x + \alpha\beta + 2 + 1/\alpha\beta\right\} = 0$

$x^2 + (\alpha+1/\beta)(\beta+1/\alpha)x + (\alpha + 1/\beta)(\beta + 1/\alpha) = 0$

இதன் தீர்வுகள் $-(\alpha + 1/\beta)$; $-(\beta + 1/\alpha)$ ஆகும்.

(iii) $y = \frac{x^2-9x+10}{x^2-11x+30}+1$ என்க.

$y = \frac{2x^2-2x+10}{x^2-11x+30}$

$y = \frac{2(x-1/2)^2+19}{(x-5)(x-6)} \Rightarrow y>0$ என்பதால்

$(x-5)(x-6)>0$ ஆகும். $x<5$; $x>6$ ஆகும்.

③ (i) x^2-k என்பது $f(x) = 2x^4+(3k+4)x^3+(2k^2-5k-5)x^2 + (2k^3-2k^2-3k-6)x+6$ கனி வகுதியாக இருக்கத் தக்கதாக k யின் பெறுமானங்களைக் காண்க.

k யின் ஒவ்வொரு பெறுமானத்தையும் பிரதியிட்டு $f(x)$ இன் ஏனைய காரணிகளை எழுதுக.

(iii) $x^2+y^2+z^2-yz-zx-xy = \frac{1}{2}\{(y-z)^2+(z-x)^2 + (x-y)^2\}$

எனக் காட்டுக. $x = b+c-a$; $y = c+a-b$; $z = a+b-c$

எனின் $x^3+y^3+z^3-3xyz = 4(a^3+b^3+c^3-3abc)$

என்பதை உய்த்தறிக.

<u>விடை</u>

(ii) $(x^2-k) = (x-k)(x+k)$ ஆல் $f(x)$ பிரிபடுவதால்

$f(x) \equiv (x^2-k)(2x^2+Ax+B)$ என உணர்த்தலாம்.

x^3 இன் குணகத்தை சமப்படுத்த

$3k-4 = A \longrightarrow ①$

$x^2 \Longrightarrow 2k^2-5k-5 = B-2k \quad — ②$

$x \Longrightarrow 2k^3-2k^2-3k-6 = -Ak \quad — ③$

மாறிலியை சமப்படுத்த $6 = -kB \quad — ④$

$① \times k + ③ \Longrightarrow 2k^3+k^2-7k-6 = 0 \quad — ⑤$

$② \times k + ④ \Longrightarrow 2k^3-3k^2-5k+6 = 0 \quad — ⑥$

$(5) \Longrightarrow (k+1)(2k^2-k-6) = 0$

$(k+1)(2k+3)(k-2) = 0 \quad — ⑦$

$⑥ \Longrightarrow (k-1)(2k^2-k-6) = 0$

$(k-1)(2k+3)(k-2) = 0 \quad — ⑧$

$⑦, ⑧ \Longrightarrow k = -3/2$; $k = 2$ ஆகும்.

$k = -3/2 \Longrightarrow A = -17/2$; $B = 4$

$\Longrightarrow f(x) \equiv (x+3/2)(2x^2-\frac{17}{2}x+4)$

$f(x) = (x+3/2)(x-\alpha)(x-\beta)$ ஆகும்.

இங்கு $\alpha = \dfrac{17+\sqrt{161}}{8}$

$\beta = \dfrac{17-\sqrt{161}}{8}$ ஆகும்.

$k = 2$ எனின் $\Longrightarrow A = 2$; $B = -3$

$\Longrightarrow f(x) \equiv (x-2)(2x^2+2x-3)$

$f(x) = (x-2)(x-\gamma)(x-\delta)$ ஆகும்.

இங்கு $\gamma = \dfrac{-1+\sqrt{17}}{2}$

$\delta = \dfrac{-(1+\sqrt{17})}{2}$ ஆகும்.

(iii) $x^2+y^2+z^2-yz-zx-xy = \frac{1}{2}\{(y^2-2yz+z^2) + (z^2-2zx+x^2)+(x^2-2xy+y^2)\}$

$= \frac{1}{2}\{(y-z)^2+(z-x)^2+(x-y)^2\}$ ஆகும்.

$$x^3+y^3+z^3-3xyz = \tfrac{1}{2}(x+y+z)\{(y-z)^2+(z-x)^2+(x-y)^2\}$$
$$= \tfrac{1}{2}(a+b+c)\{4(c-b)^2+4(a-c)^2+4(b-a)^2\}$$
$$= 2(a+b+c)\{(b-c)^2+(c-a)^2+(a-b)^2\}$$
$$= 4a^3+b^3+c^3-3abc$$

(4) ஓர் நேர் நிறைவெண் சுட்டிக்கு டி மோய்வரின் தேற்றத்தைக் கூறுக.
$z = \cos\theta + i\sin\theta$ எனின், ஒரு நேர் நிறைவெண் n இற்கு $z^n + 1/z^n = 2\cos n\theta$ எனவும்
$z^n - 1/z^n = 2i\sin n\theta$ எனவும் காட்டுக.
$(z+1/z)^8$, $(z-1/z)^8$ ஆகியவற்றின் விரிகள் எழுதி நோக்குவதன் மூலம்
(a) $64(\cos^8\theta + \sin^8\theta) = \cos 8\theta + 28\cos 4\theta + 35$ எனவும்
(b) $8(\cos^8\theta - \sin^8\theta) = \cos 6\theta + 7\cos 2\theta$ எனவும்
காட்டுக.
$\cos 6\theta = -7\cos 2\theta$ எனும் சமன்பாட்டின் பொதுத் தீர்வைக் காண்க.

விடை

டி மோய்வரின் தேற்றம்

$(\cos\theta + i\sin\theta)^n = \cos n\theta + i\sin n\theta$
இங்கு n நேர் முழு எண்.
$z = \cos\theta + i\sin\theta$
$z^n = \cos n\theta + i\sin n\theta$; $z^{-n} = \cos n\theta - i\sin n\theta$ ஆகும்.
$z^n = \cos n\theta + i\sin n\theta$, $z^n - z^{-n} = 2i\sin n\theta$ ஆகும்.

$$(z+1/z)^8 = (z^8+1/z^8) + 8(z^6+1/z^6) + 28(z^4+1/z^4) + 56(z^2+1/z^2) + 70 \text{ ஆகும்.}$$

$z = \cos\theta + i\sin\theta$ எனப் பிரதியிட

$$2^8\cos^8\theta = 2\cos 8\theta + 16\cos 6\theta + 56\cos 4\theta + 112\cos 2\theta + 70$$
$$2^7\cos^8\theta = \cos 8\theta + 8\cos 6\theta + 28\cos 4\theta + 56\cos 2\theta + 35 \quad \text{— (3)}$$
$$(z-1/z)^8 = (z^8-1/z^8) - 8(z^6+1/z^6) + 28(z^4+1/z^4) - 56(z^2-1/z^2) + 70 \text{ ஆகும்.}$$

$z = \cos\theta + i\sin\theta$ எனப் பிரதியிட

$$2^7\sin^8\theta = \cos 8\theta - 8\cos 6\theta + 28\cos 4\theta - 56\cos 2\theta + 35 \quad \text{— (4)}$$

(3)+(4) $64(\cos^8\theta + \sin^8\theta) = \cos 8\theta + 28\cos 4\theta + 35$ ஆகும்
(3)−(4) $8(\cos^8\theta - \sin^8\theta) = \cos 6\theta + 7\cos 2\theta$ ஆகும்.

$\therefore \quad \cos 6\theta + 7\cos 2\theta = 0$

$\Rightarrow \cos^8\theta - \sin^8\theta = 0$

$(\cos^4\theta - \sin^4\theta)(\cos^4\theta + \sin^4\theta) = 0$

$\cos^4\theta + \sin^4\theta \neq 0 \Rightarrow \cos^4\theta - \sin^4\theta = 0$ ஆகும்.

$\cos 2\theta = 0$; $2\theta = 2n\pi \pm \pi/2$

$\theta = n\pi + \pi/4$

இங்கு $n = 0, \pm 1, \pm 2$

முறை II $\cos 6\theta + 7\cos 2\theta = 0$

$\cos^8\theta - \sin^8\theta = 0$ $\quad \cos\theta \neq 0 \Rightarrow \tan^8\theta = 1$

$\Rightarrow \tan\theta = \pm 1$; $\theta = n\pi \pm \pi/4$ ஆகும்.

(5) P_0, P_1, P_2 என்னும் புள்ளிகள் முறையே z_0, z_1, z_2 என்னும் சிக்கல் எண்களை வகைகுறிக்கின்றன. $\frac{P_0P_2}{P_0P_1} = \lambda > 0$ ஆகவும் θ ஆனது இடஞ்சுழிப் போக்கில் அளக்கப்படும்போது $\angle P_1P_0P_2 = \theta$ ஆகவும் இருக்குமெனின் $(z_2 - z_0), (z_1 - z_0)(\cos\theta + i\sin\theta)$ என்னும் சிக்கல் எண்கள் வகைகுறிக்கும் புள்ளிகளைப் பெறுவதற்கு கேத்திரகணித அமைப்புகளைத் தந்து,

$z_2 = z_0 + \lambda(z_1 - z_0)(\cos\theta + i\sin\theta)$ என்பதை உய்த்தறிக.

A, B, C, D, E, F ஆகிய உச்சிகள் இடஞ்சுழிப் போக்கில் எடுத்துக் கொள்ளப்படும் ஒழுங்கான ஒர் அறுகோணி ABCDEF இலே A, B ஆகிய உச்சிகள் முறையே $2+2i$, $3+3i$ என்னும் சிக்கல் எண்களை வகைகுறிக்கின்றன. மேலுள்ள பேற்றைப் பயன்படுத்தி E, F ஆகிய உச்சிகள் வகைகுறிக்கும் சிக்கல் எண்களைக் காண்க.

விடை



P_0 குறிக்கும் சிக்கலெண் $x_0 + iy_0$ $[x_0, y_0]$

P_1 " " $x_1 + iy_1$ $[x_1, y_1]$

P_2 " " $x_2 + iy_2$ $[x_2, y_2]$

என்க.

$OP_2' \parallel P_0P_2$; $OP_1' \parallel P_0P_1$

ஆக வரையப்பட்டுள்ளது.

$P_1\hat{P_0}P_2 = \theta$

$\therefore P_1'OP_2' = \theta$ ஆகும்.

$P_2' P_2 P_0$ ஒர் இணைகரமாகும்

மூலைவிட்டங்கள் சந்திக்கும்

புள்ளியின் ஆள்கூறு

$\frac{x_2}{2} \; ; \; \frac{x_0 + x_2'}{2}$

$\therefore \frac{x_2}{2} = \frac{x_0 + x_2'}{2} \; ; \; x_2' = x_2 - x_0$

இவ்வாறே $y_2' = y_2 - y_0$

P_2' குறிக்கும் சிக்கலெண் $(x_2 - x_0) + i\,(y_2 - y_0)$

$\Longrightarrow x_2 + i y_2 - (x_0 - i\, y_0)$

$\Longrightarrow z_2 - z_0$ ஆகும்.

இவ்வாறே P_1' குறிக்கும் சிக்கலெண் $z_1 - z_0$ ஆகும்.

$OP_1' = OP_1''$ ஆக OP_2' இல் P_1'' தெரிக.

$\therefore$ P_1'' குறிக்கும் சிக்கலெண் $= (z_1 - z_0)(\cos\theta + i \sin\theta)$

ஆனால் $\frac{P_0P_2}{P_0P_1} = \lambda \; ; \; \frac{OP_2'}{O_1P_1'} = \lambda$

$OP_2' = \lambda\, OP_1'$, $\therefore$ P_2 குறிக்கும் சிக்கலெண்

$= \lambda [z_1 - z_0][\cos\theta + i \sin\theta]$

ஆனால் P_2' குறிக்கும் சிக்கலெண் $z_2 - z_0$

$z_2 - z_0 = \lambda [z_1 - z_0][\cos\theta + i \sin\theta]$

$z_2 = z_0 + \lambda (z_1 - z_0)(\cos\theta + i \sin\theta)$



$AB = a$ எனின்

$AE = \sqrt{3}\, a$

$\frac{AE}{AB} = \sqrt{3}$

$\measuredangle EAB = 90^\circ$

தேர்ந்தெடுப்பு E குறிக்கும் சிக்கலெண்

$2 + 2i + \sqrt{3}\,[(3 + 3i) - (2 - 2i)(\cos \pi/2 + i \sin \pi/2]$

$= (2 - \sqrt{3}) + (2 + \sqrt{3})\, i$

$\measuredangle BAF = 2\pi/3 \; ; \; \frac{AF}{AB} = 1$

$\therefore$ F குறிக்கும் சிக்கலெண்

$(2 + 2i) + 1\{(3 + 3i) - (2 - 2i)\}(\cos \frac{2\pi}{3} + i \sin \frac{2\pi}{3})$

$= \frac{\sqrt{3}}{3}\left[(\sqrt{3} - 1) + (\sqrt{3} + 1)\, i\right]$

⑥ (i) ஓர் அலுமாரியிலே வெவ்வேறு வகையான 16 பாடநூல்கள் உள்ளன. இவற்றில் 3 அட்சர கணித நூல்களும் 4 நுண் கணித நூல்களும் 3 கேத்திர கணித நூல்களும் ஏனையவை திரிகோண கணித நூல்களும் ஆகும். இந்நூல்கள் எத்தனை வழிகளில் ஒழுங்கு படுத்தி வைக்கலாம்? அதோடு, ஒவ்வொரு பாடத் துறையும் பற்றிய நூல்கள் ஒருமிக்க இருக்க வேண்டிய போது உள்ள ஒழுங்குகளின் எண்ணிக்கையையும் காண்க.

(ii) $(5\sqrt{2}+7)^{1/3}-(5\sqrt{2}-7)^{1/3}$ ஆனது 2 இற்குச் சமனெனக் காட்டுக.

<u>விடை</u>

அட்சர கணிதம் — 3 ; கேத்திர கணிதம் 3
நுண் கணிதம் — 4 , திரிகோண கணிதம் 6

1ம் புத்தகத்தை 16 முறைகளில் தெரிவு செய்யலாம்.
2ம் " 15 " " " "
- - - - - - - - - - - - - - - - - - -
- - - - - - - - - - - - - - - - - - -
15ம் 2 " " " " "
16ம் " 1 முறையில் மாத்திரம் தெரிவு செய்யலாம்.

ஆகவே இப்புத்தகங்கள் $= 16 \times 15 \times 14 \times \cdots 2 \times 1 = 16!$ வழிகளில் ஒழுங்கு படுத்தலாம்.

பாட அடிப்படையில் புத்தகங்கள் 4! வழிமுறைகளில் ஒழுங்குபடுத்தலாம்.

<u>அதற்குள்</u> அட்சரகணித புத்தகங்கள் 3! வழிகளில் ஒழுங்கு படுத்தலாம் நுண் கணித புத்தகங்கள் 4! வழிகளில் ஒழுங்கு படுத்தலாம்
கேத்திரகணித புத்தகங்கள் 3! வழிகளில் ஒழுங்கு படுத்தலாம்.
திரிகோண கணித " 6! " "

ஆகவே ஒவ்வொரு பாடத் துறையும் ஒருமித்து இருக்க கூடியவாறு தரப்பட்ட புத்தகங்கள் $(4!)(3!)(4!)(3!)(6!)$ எண்ணிக்கையான வழிகளில் ஒழுங்கு படுத்தலாம்.

(ii) $(5\sqrt{2}+7)^{1/3}-(5\sqrt{2}-7)^{1/3}$

$= \left\{(\sqrt{2}+1)(3+2\sqrt{2})\right\}^{1/3} - \left\{(\sqrt{2}-1)(3-2\sqrt{2})\right\}^{1/3}$

$= \left\{(\sqrt{2}+1)(1+\sqrt{2})^2\right\}^{1/3} - \left\{(\sqrt{2}-1)(\sqrt{2}-1)^2\right\}^{1/3}$

$= (\sqrt{2}+1) - (\sqrt{2}-1) = 2$ //

மாற்றுமுறை: $(5\sqrt{2}+7)^{1/3} - (5\sqrt{2}-7)^{1/3} = p$ என்க.

$$\Longrightarrow p^3 = (5\sqrt{2}+7) - 3[5\sqrt{2}+7]^{2/3}(5(\sqrt{2}-7)^{1/3} + 3(5\sqrt{2}+7)^{1/3}(5\sqrt{2}-7)^{2/3} - (5\sqrt{2}-7)$$

$$p^3 = 14 - 3\{(5\sqrt{2}+7)(5\sqrt{2}-7)\}^{1/3}\{(5\sqrt{2}+7)^{1/3} - (5\sqrt{2}-7)^{1/3}\}$$

$$p^3 = 14 - 3\{1\}^{1/3}\ p = 14 - 3p$$

$$p^3 + 3p - 14 = 0$$

$$(p-2)(p^2+2p+7) = 0$$

$$p = 2 \quad \text{OR} \quad p^2+2p+7 = 0$$

$p = 2$ $\qquad\qquad$ $\because p$ கற்பனை ஆகும்.

$\Longrightarrow p = 2$ என்பதே மெய்மூலம் ஆகும்.

$\therefore (5\sqrt{2}+7)^{1/3} - (5\sqrt{2}-7)^{1/3} = 2$ ஆகும்.

(7) ஒரு நேர் நிறைவெண் சுட்டிக்கு ஈருறுப்புத் தேற்றத்தைக் கூறி நிறுவுக.

(a) $x = 1/3$ ஆக இருக்கும் போது x இன் ஏறுவலுக்களில் $(\frac{1}{2}+x)$ இன் விரிவில் உள்ள அதியுயர் உறுப்புகளின் பெறுமானத்தைக் காண்க.

(b) $(1+x)^n = C_0 + C_1x + C_2x^2 + \dots\dots C_nx^n$ எனின்,

$\frac{C_r}{C_{r-1}}$ $r(C_r + C_{r-1}) = (n+1)C_{r-1}$ எனக் காட்டுக.

இதிலிருந்து $C_0 + 3C_1 + 5C_2 + \dots + (2n+1)C_n$

$= 2^n(n+1)$ என நிறுவுக.

விடை

(a) $(\frac{1}{2}+x)^9$ இன் விரிவின் r ஆம் உறுப்பு T_r என்க.

$$\Longrightarrow \frac{T_{r+1}}{T_r} = {}^9C_r(\tfrac{1}{2})^{9-r}x^r / {}^9C_{r-1}(\tfrac{1}{2})^{9-r+1}$$

$$\frac{T_{r+1}}{T_r} = \frac{(10-r)}{r}2x$$

$$\frac{T_{r+1}}{T_r} = \frac{2(10-r)}{3r} \quad [r = 1/3]$$

$\frac{T_{r+1}}{T_r} \geq 1$ எனின் $\quad 20 - 2r \geq 3r$

$\frac{T_{r+1}}{T_r} \geq 1$ எனின் $r \leq 4$ ஆகும்.

$r = 4 \Longrightarrow T_{r+1} = T_r$ ஆகும்.

அது $T_5 = T_4$ ஆகும்.

அத்துடன் $T_5 = T_4 > T_3 > T_2 > T_1$ ஆகும்.

இவற்றிலான் பெரிய உறுப்பு $= T_4 = T_5$ ஆகும்.

மிகப் பெரிய உறுப்பு $= T_4$

$$= {}^9C_3 (1/2)^6 (1/3)^3 = \frac{9!}{6!\,3!} \times \frac{1}{2^6} \times \frac{1}{3^3}$$

$$= \frac{7}{144}$$ ஆகும்

(b) $(1+x)^n = C_0 + C_1 x + C_2 x^2 + \ldots C_n x^n = \sum_{r=1}^{n} C_{r-1} x^{r-1}$ ஆகும்

